36

பூஞ்சோலை

கௌரவ ஆசிரியர் : அழ. வள்ளியப்பா

அணா 4

டிஸம்பர்-1962

Sole Distributors:

SHOBA AGENCIES

32/33, Linghi Chetty St., MADRAS - 1.

பூஞ்சோலை

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

மலர் 2 | 1, டிசம்பர், 1952 | இதழ் 9

கட்டுரைகள்

வெல்லக்கட்டிப் பிரியர் 4
இரு மகா மல்லர்கள் 50
என் அக்கா 40

பாட்டு

கழுகும் காக்கையும் 88

கதைகள்

பரிசுப் பேழை 10
பளிங்கு மண்டபம் (தொடர் கதை) 17
வேலனின் நண்பன் (அட்டைப்படக் கதை) 24
புலியைக் கொன்றவன் 33
தண்டனை 35
தோட்டத் தம்பி 46
வேடிக்கைக் கதைகள் 53
சிபார்சு 58

மற்றவை

கேளுங்கள்: பதில் சொல்லுகிறோம்,
வம்புத் தம்பி, மாணவர் மன்றம் முதலியன

DECEMBER

SUN. -	★	7	14	21	28
MON. -	1	8	15	22	29
TUE. -	2	9	16	23	30
WED. -	3	10	17	24	31
THU. -	4	11	18	25	★
FRI. -	5	12	19	26	★
SAT. -	6	13	20	27	★

ஆசிரியர் சொல்லுகிறார்:

உங்கள் யோசனைகள்

'மாறுதல் வளர்ச்சிக்கு அறிகுறி' என்பார்கள். 'பூஞ்சோலை' யிலும் அப்போதைக் கப்போது, சில மாறுதல்களைச் செய்து வரு கிறோம். இப்போது வெளிவருவதில் உங்களுக்கு எந்த எந்த விஷயங்கள் பிடித்திருக்கின்றன? இன்னும் எந்த எந்த மாதிரி விஷயங்களைச் சேர்க்க வேண்டும்? உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். தயங்க வேண்டாம்; தாராளமாக எழுதி அனுப் புங்கள். நல்ல யோசனைகளை மனமார ஏற்போம்.

முக்கியமானவை

நமது முதல் மந்திரி **ராஜாஜியின்** வாழ்க்கையில் நடந்த பல சுவையான நிகழ்ச்சிகளை இந்த இதழில் படிக்கப்போகிறீர்கள். வாடிய புடலங்காயைப்போல் கூனிக் குறுகிப் பலமிழந்து இருக்கி றோம், நம்மில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர். '**இரு மகா மல்லர் க**'ளைப் பற்றிப் படித்த பிறகாவது உடலினை உறுதி செய்யவேண் டும் என்ற ஆசை நமக்குத் தோன்றாமலிருக்குமா?

பொங்கல் மலர்

பொங்கல் மலர் வேலை வெகு மும்முரமாக நடந்துகொண் டிருக்கிறது. நீங்களும், பெரியவர்களும் 'பூஞ்சோலை'யிடத்தில் ஒரு தனி மதிப்பு வைத்திருக்கிறீர்கள். அந்த மதிப்பு இன்னும் பல மடங்கு பெருகவேண்டுமென்ற எண்ணத்துடனே மலரைத் தயார் செய்து வருகிறோம்.

அழ. வள்ளியப்பா

நமது முதல் மந்திரி ராஜாஜி சிறு பையனாக இருந்தபோது, அவர் மிகவும் பிரியமாகத் தின்பது எது தெரியுமா?

'லட்டு என்கிறீர்களா? இல்லை.

'மசால் வடையா?' இல்லை.

'புளியோதரையா?'

அதுவும் இல்லை.

'ஒரு வேளை.........சீனி மிட்டாயா யிருக்குமோ?'

அதெல்லாம் இல்லை.

'அப்படியானால்......?'

சரி, சரி. நானே சொல்லி விடுகிறேன். அவர் மிகவும் பிரியமாகத் தின்பது வெல்லக் கட்டிதானாம்!

சிறு பையனாக இருக்கும் போதுதான், வெல்லக்கட்டிப் பிரியராக இருந்தார். ஆனால், இப்போது அவருக்கு என்ன பிடிக்குமோ? எனக்குத் தெரியாது!

* * *

சேலத்திலே ஒரு பங்களா இருக்கிறது. அதில் பேய் வசிப்பதாக அந்தக் காலத்தில் அங்கிருந்தவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பங்களாவுக்கு 'சூரமங்கலம் பேய் பங்களா' என்ற பெயரையும் சூட்டினார்கள்.

பேய் இருக்கிறது என்று சொல்லும்போது, அதில் யாராவது குடியிருப்பார்களா? அது காலியாகவே இருந்து வந்தது.

ராஜாஜிக்கு பேய் பிசாசுகளி

199248

வெல்லக்கட்டிப் பிரியர்!

லெல்லாம் நம்பிக்கையே கிடையாது. பேய் என்பதெல்லாம் வெறும் மனப்பேய்தான் என்று அவர் கருதுபவர். ஆகையால், அந்தப் பேய் பங்களாவில் அவர், தம்முடைய குடும்பத்துடன் போய் வசிப்பதென்று தீர்மானித்தார். அவருடன், அவருடைய நெருங்கிய நண்பர்கள் இருவரும் குடும்பத்தோடு குடியேறினர்.

இதைக் கண்ட ஊர் மக்களெல்லாம், "ஐயோ பாவம்! இவர்களைப் பேய் என்ன செய்யப் போகிறதோ!" என்று அனுதாபப்பட்டனர்.

ஆனால், ராஜாஜியோ அவருடன் இருந்தவர்களோ எவ்விதமான கவலையும் கொள்ளவில்லை. ஒரு வருஷம் கழிந்தது.

ராஜாஜி உடல் நலம் இல்லாமல் படுத்து விட்டார். அவர் மனைவிக்கும் உடம்பு சரியில்லை.

உடனே, ஊரிலுள்ளவர்கள், "பார்த்தீர்களா? பேய் சும்மா இருக்குமா?" என்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால், ராஜாஜியும், அவர் மனைவியும் சில நாட்களில் குணமடைந்து விட்டார்கள். உலகத்தில் எத்தனையோ பேர்கள் நோய்வாய்ப் படுகிறார்கள். அதற்கெல்லாம் காரணம் பேய்தானா?

உடம்பு குணமானதும், ராஜாஜியோ அல்லது மற்றவர்களோ 'சரி, தப்பியது தம்பிரான் புண்ணியம்; இனி இங்கிருக்கக் கூடாது' என்ற முடிவுக்கு வந்துவிடவில்லை!

அப்புறமும், அந்த பங்களாவிலேயே தைரியமாக வசித்து வந்தார்கள். தைரியசாலிகளிடத்தில் 'பேய்' வாலைக் காட்டுமா?

அது யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தானாகவே அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டது.

* * *

ராஜாஜி சென்னையில் காலேஜ் படிப்புப் படித்துக் கொண்டிருந்த சமயம், அவர் இருந்த 'ஹாஸ்டலை'ப் பார்க்க வடதேசத்து ஞானி ஒருவர் வந்திருந்தார். அவர் ஹாஸ்டலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது, ராஜாஜி இருந்த அறைக்குள்ளேயும் நுழைந்தார்.

எதிரே சுவரில் இருந்த கிருஷ்ண பகவானின் படம் அவருடைய கண்ணில் பட்டது. அது ஒரு வர்ணப் படம். அதில் கிருஷ்ணபகவானுடைய உடல் நீல வர்ணத்தால் அழகாகத் தீட்டப்பட்டிருந்தது.

உடனே, அந்த ஞானி, ராஜாஜியைப் பார்த்து, "கிருஷ்ண பகவானின் உடல் நீல நிறத்தில் இருக்கிறதே. இதற்கு என்ன காரணம் தெரியுமா?" என்று கேட்டார்.

உடனே ராஜாஜி ஜன்னல் வழியாகத் தெரிந்த நீலநிறமான

கடலையும், ஆகாயத்தையும் சுட்டிக் காட்டி, "நீல நிறமான ஆகாயமும், கடலும் எல்லையில்லாது விரிந்து கிடக்கின்றன. அதுபோல், எல்லையில்லாத விசாலத்தைக் காட்டத்தான் எங்கும் வியாபித்துள்ள கடவுளுக்கு நீலநிறம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

இந்தப் பதிலைக் கேட்டு, அந்த ஞானி மிகவும் வியப்படைந்தார். ராஜாஜியை வெகுவாகப் பாராட்டினார்.

* * *

வக்கீல் தொழிலை ஆரம்பிப்பவர்கள். முதலில் ஒரு பெரிய வக்கீலிடம் 'ஜூனிய'ராக இருப்பது வழக்கம். சில வருடங்கள் சென்றுதான் சொந்தமாகத் தொழிலை நடத்துவார்கள். ஆனால், நம் ராஜாஜி எடுத்த எடுப்பிலேயே சொந்தமாக — யாரிடமும் ஜூனியராகஇல்லாமலே தொழிலை ஆரம்பித்து விட்டாராம்! நல்ல வருமானமும் கிடைத்து வந்ததாம். பெயரும், பிரபலப்பட்டதாம்!

ஒரு நாள் ராஜாஜி 'கோர்ட்'டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த சமயம். அப்போது, ஒருவர் அவரிடம் வந்து, "ஐயா, நான் மலையாளத்தைச் சேர்ந்தவன். வாத்தியார் வேலை பார்க்கிறேன். இங்கு ஒரு வேலையாக வந்தேன், வந்த இடத்தில் பணம் களவுபோய்விட்டது. செலவுக்குப் பணம் வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டார்.

உடனே ராஜாஜி, அவருடைய பெயர், அவர் எந்த ஊர், எந்தப் பள்ளியில் வேலை பார்க்கிறார் என்ற விவரங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டு "சரி, உள்ளே போய்ச் சாப்பிடுங்கள். நான் இப்போது 'கோர்ட்'டுக்குப் போகிறேன். மத்தியானம் வந்துவிடுவேன். அப்புறம் என்னால் ஆனதைச் செய்கிறேன்" என்று கூறிவிட்டுக் 'கோர்ட்'டுக்குப் போய்விட்டார்.

'கோர்ட்'டுக்குப் போனவர் சும்மா இருக்கவில்லை. அங்கிருந்து, அந்த மனிதர் சொன்ன பள்ளிக்கூடத்துக்குத் தந்தியடித்து 'இந்தப் பெயருடையவர் உங்கள் பள்ளியில்தான் இருக்கிறாரா?' என்று கேட்டார்.

அங்கிருந்து பதில் தந்தியும் வந்து விட்டது. அந்த மனிதர் சொன்னது முழுப் பொய் என்பதை அறிந்தார், ராஜாஜி. உடனே, இரண்டு போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

அங்கு ராஜாஜியை எதிர்பார்த்திருந்த அந்த மனிதருக்கு, ராஜாஜியுடன் போலீஸார் வருவதைக் கண்டதும் நடுக்கம் ஏற்பட்டது. அவரைக் கைது செய்யும்படி போலீஸாரிடம் ராஜாஜி சொன்னார். வழக்குப் பதிவாகி விட்டது.

வழக்கு நடந்தபோது, அந்த மனிதர் மாஜிஸ்ட்ரேட்டிடம், "எனக்கு வக்கில் வைக்கப் பண

மில்லையே!'' என்று கூறி வருந்தினர்.

உடனே, ராஜாஜியே அந்த மனிதரின் வக்கீலாக இருந்து வாதாட முன் வந்தார்.

"குற்றவாளி 200 ரூபாய் அபராதம் கட்டவேண்டும்'' என்று மாஜிஸ்ட்ரேட் கூறினர்.

"200 ரூபாய் அதிகம். அந்த ஏழை எங்கிருந்து கொடுப்பார்?'' என்ருர் ராஜாஜி.

"சரி, 50 ரூபாய் அபராதம்'' என்ருர், மாஜிஸ்ட்ரேட்.

"அதுவும் அதிகம். இன்னும் குறைத்தால் நல்லது'' என்ருர், ராஜாஜி.

"சரி, பத்து ரூபாய் அபராதம்'' என்ருர் முடிவாக மாஜிஸ்ட்ரேட்.

உடனே, ராஜாஜி தம்முடைய சட்டைப்பைக்குள் கையை விட்டார். ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அந்தக் குற்றவாளிக்காகக் கட்டினர்.

இதைக்கண்டு யாவரும் வியந்தனர் நாம் கூடத்தான் இதைக் கேட்டு வியப்படைகிருேம்

குற்றம் செய்தவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார், ராஜாஜி அதே சமயம், அவருடைய ஏழ்மை நிலேக்கு இரங்கி அபராதத் தொகையைத் தாமே கட்டினர். இதிலிருந்தே ராஜாஜி மிகவும் கண்டிப்பானவர்; அதே சமயத்தில் இரக்க குணமும் உடையவர் என்பது தெரிகிறதல்லவா?

• • •

ராஜாஜி புதுப்பாளேயத்தில் காந்தி ஆசிரமம் ஏற்படுத்தி அதை நல்ல முறையில் நடத்தி வந்தார். அங்கிருந்தபோதே தீவிரமாக மதுவிலக்குப் பிரசாரம் செய்து வந்தார். 'விமோசனம்' என்ற பத்திரிகையை அப்போதுதான் நடத்தி வந்தார்.

ராஜாஜியும், ஆசிரம ஊழியர்களும் அடிக்கடி பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று மதுவிலக்குப் பிரசாரம் செய்து வருவார்கள்.

ஒரு சமயம், சில ஆசிரம ஊழியர்கள், ஆசிரமத்தில் தயார் செய்த சில மதுவிலக்குப் படங்களே எடுத்துக்கொண்டு பக்கத்துக் கிராமத்துக்குச் சென்ருர்கள். அங்கு ஒரு கூட்டம் போட்டு அந்தப் படங்களே மக்களிடம் காட்டி, கள்ளினல் ஏற்படும் தீமைகளேக் கூறிக்கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று அந்த ஊர்க்காரர் ஒருவர் வந்து கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாதபடி கலகம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

அங்கு கூடியிருந்த மக்கள் பயந்த சுபாவம் உடையவர்கள். ஆகையால், கூட்டத்திலிருந்து எல்லோரும் மெதுவாக நழுவி விட்டார்கள். கடைசியாக ஆசிரம ஊழியர்கள் கூட்டத்தை நடத்த முடியாமல் வருத்தத்துடன் ஆசிரமத்துக்குத் திரும்பி விட்டனர்.

ஆசிரமத்துக்குச் சென்றதும், ராஜாஜியிடம் விஷயத்தைக் கூறினர். ராஜாஜி அவர்கள் கூறியதைக் கேட்டுவிட்டுச் சும்மா இருந்து விடவில்லே. மறுநாள் மாலேயே ஒரு மாட்டு வண்டியில் ஆசிரம ஊழியர்களே அழைத்துக்கொண்டு அதே கிராமத்திற்குச் சென்ருர். அங்கு மறுமுறையும் கூட்டம் கூட்டி,

முதல் நாள் விட்ட இடத்திலிருந்து படங்களைக் காட்டி விளக்கிக் கூறினார்.

படங்கள் காட்டி முடிந்ததும், "நேற்றுக் கூட்டத்தை நடத்த முடியாதபடி தடை செய்தவர், தமக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், நேராக வந்து என்னிடத்தில் கூறட்டும். பதிலளிக்கத் தயாராயிருக்கிறேன்" என்றார்.

ஆனால், அந்த மனிதர் அன்று அக்கூட்டத்துப்பக்கம் தலைகாட்டவே இல்லை. ராஜாஜியிடம் அவர் 'ஜம்பம்' பலிக்குமா?

* * *

ஒரு சமயம், ராஜாஜிக்கு ஜுரம் கண்டது. ஜுரம் என்றால் சாதாரண ஜுரம் அல்ல; கப ஜுரம்!

ராஜாஜி பிழைப்பதே சந்தேகம் என்ற நிலை வந்துவிட்டது. உடனே, டாக்டரை அழைத்துவந்தனர். அவர் ராஜாஜியின் கையைப்பிடித்துப் பார்த்துவிட்டு, 'பிழைப்பது கடினம், இன்னும் கொஞ்ச நேரத்தில் உயிர்போய் விடும்போலிருக்கிறது' என்று கூறிவிட்டார்.

உடனே, சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் அழுதுவிட்டனர்; டாக்டரும் அழுதுவிட்டார்.

இதைக் கண்ட ராஜாஜி அங்கிருந்த ஒருவரை சைகை காட்டி அருகில் அழைத்தார். 'இந்த டாக்டருக்கு மூளை சரியாயில்லை. வேறு ஒருவரை அழைத்து வாருங்கள்' என்றார்.

ராஜாஜி சொன்னபடியே வேறு ஒரு டாக்டரை அழைத்து வந்தார்கள். அந்த டாக்டரும், ஏற்கனவே வந்திருந்த டாக்டரும் கலந்து ஆலோசித்து ராஜாஜிக்கு சிகிச்சை அளித்தனர். டாக்டரின் 'ஜோஸ்யம்' பொய்த்துவிட்டது! ராஜாஜியும் பிழைத்துவிட்டார் என்பது நான் சொல்லித்தானா தெரியவேண்டும்.

* * *

மகாத்மா காந்தி ஒரு சமயம் பங்களூர் சென்றிருந்தார். அங்கே, மகாராஜாவுக்குச் சொந்தமான ஒரு விடுதியில் தங்கியிருந்தார். அவருடன் கூட ராஜாஜியும் இருந்தார்.

அங்கிருந்த போது, காந்திஜிக்கு உடல் நிலை சரியில்லை. இரத்தக் கொதிப்பு வியாதி. ஆனால், அவருடன் அதிகமாக யாரும் பேசக் கூடாது என்று டாக்டர் கூறியிருந்தார்.

அந்தச் சமயம் ஒரு பெரியவர் காந்திஜியைப் பார்க்க வந்திருந்தார். பேட்டி காண இரவு 8-30 மணியிலிருந்து 9 மணிவரை அவருக்கு நேரம் கொடுக்கப்பட்டிருந்தது.

வந்தவர் காந்திஜியுடன் ஏதேதோ பேச ஆரம்பித்தார். பதினைந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும். வந்தவர், காந்திஜியுடன் பலத்த விவாதம் செய்ய ஆரம்பித்ததால், கூச்சல் பலமாகக் கேட்டது.

காந்திஜிக்கோ இரத்தக்

கொதிப்பு வியாதி. டாக்டரோ அதிகமாகப் பேசக்கூடாது என்கிறார். என்ன நேருமோ என்று எல்லோரும் பயந்தனர்.

ஆனால், அதே சமயம் 'டக்'கென்று மின்சார விளக்குகள் யாவும் ஒரு விநாடி அணைந்து பிறகு எரிய ஆரம்பித்தன. பங்களூரில் இரவு மணி 9 ஆகிவிட்டது என்பதை அறிவிப்பதற்காக ஒரு விநாடி மின்சார விளக்கை அணைத்துப் பிறகு எரியவிடுவார்கள். அப்போது விளக்குகள் அணைந்துபிறகு எரிந்ததால், மணி 9 ஆகிவிட்டது என்றே எல்லோரும் நினைத்தார்கள்.

உடனே, ராஜாஜி காந்திஜியுடன்பேசிக்கொண்டிருந்த பெரியவரிடம் சென்று, 'மணி 9 ஆகிவிட்டது' என்று கூறி அவரை வெளியே அழைத்து வந்து அனுப்பிவைத்தார்.

ஆனால், 15 நிமிஷங்கள் கழித்துத் திரும்பவும் ஒரு முறைவிளக்குகள் ஒரு விநாடி அணைந்து எரியலாயின. இதைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தனர். ஆனால், ஒரே ஒருவர் மட்டும் வியப்படையவில்லை! அவர் யார்?

காந்திஜியை அதிகம் பேசவிடக்கூடாது என்பதற்காக, 15 நிமிஷங்கள் முன்னதாகவே 'மெயின் சுவிட்'சை அணைத்து ஏற்றிய நம் ராஜாஜியேதான்!

பொங்கல் வாழ்த்துக்கள்

கலர்	சைஸ்	விலை (கவருடன்)
மூன்று	5" × 4$\frac{1}{4}$"	0 2 0
,,	5$\frac{1}{4}$" × 4"	0 2 0
,,	3$\frac{1}{2}$" × 5$\frac{1}{4}$"	0 2 0
,,	3$\frac{1}{2}$" × 4"	0 2 0
இரண்டு	4$\frac{1}{2}$" × 3$\frac{1}{8}$"	0 1 6
ஒரு	4$\frac{1}{4}$" × 3"	0 1 0

மொத்தமாக வாங்குபவர்களுக்கு நூற்றுக்கு 33$\frac{1}{3}$ கமிஷன் தரப்படும்

மானேஜர்
"பூஞ்சோலை"
த. பெ. எண் 1803
சென்னை-1.

பரிசுப் பேனா

வி. எச். கிருஷ்ணன்

○

"தாத்தா, எனக்கு அந்தப் பேனா......"

"அதெல்லாம் முடியாது."

"என்ன தாத்தா, நான் கேட்டால் கூடவா தரமாட்டாய்!"

"யார் கேட்டாலும் தரமுடியாது!"

"நாளைக்குப் பரீட்சை எழுதியதும் கொண்டுவந்து கொடுத்து விடுகிறேன்"

"டேய் வேலு, இத்தனை நாளாக நான் உயிரைப்போல் காத்துக் கொண்டிருக்கும் பேனாவை ...அதுவும் என் வாழ்க்கையையே வர்ணிக்கும் அந்தப் பேனாவை நான் தர முடியாது. அது என் வாழ்க்கையில் நடந்த ஒரு முக்கியமான சம்பவத்தை நினைப்பூட்டும் அருமைப் பேனாவாயிற்றே!"

"என்ன! முக்கியமான சம்பவத்தைக் குறிக்கும் பேனாவா! அது என்ன சம்பவம், தாத்தா" என்று தாத்தாவைப் பார்த்து ஆவலுடன் கேட்டான், வேலு. ஆம்! இந்த சம்பாஷணை தாத்தாவிற்கும் வேலுவிற்கும் நடந்த சம்பாஷணைதான்.

* * *

அன்று...இல்லை நான் சிறுவனாக இருந்தபோது உன்னைப் போல் மாளிகையில் வாழவில்லை; பட்டு உடை உடுத்துக்கொண்டிருக்கவில்லை; காரில் பள்ளிக்குச் சென்று வரவில்லை; உன் அப்பாவைப் போல் என் அப்பா ஆபீசராக இல்லை; அப்போது நான் ஓட்டைக் குடிசையில் வாழ்ந்தேன். கிழிந்த ஒரே சட்டையுடன் திரிந்தேன்; ஐந்து மைல் தூரம் நடந்து சென்று படித்து வந்தேன். என் அப்பா பயிர்த்தொழில் செய்து கொண்டிருந்தார். ஒரு நாளைக்குச் சாப்பிட்டால் ஐந்து நாட்கள் பட்டினி கிடப்போம். இப்படியாகத்தான் என் இளங்கால வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது.

எப்படியோ ஆறும் படிவம் வந்து விட்டேன். அன்றைக்கு அரசாங்கப் பரீட்சையின் கடைசி நாள். என் முன் உட்கார்ந்து கொண்டு இருந்தவன் ராஜாராமன். அவன் பணக்காரன். மூன்று வருடங்களாக என்னுடன் படித்து வருகிறான். ஆனால், ஒரு நாளும், என்னோடு அவன் பேசியது கிடையாது. காரணம், அவன் பணக்காரச் சிறுவன்!

அவன் பரீட்சை எழுதுவதற்காக அவன் அப்பா உயர்ந்த 'பார்க்கர்' பேனா ஒன்றை வாங்கிக் கொடுத்திருந்தார். ஆனால், என் அப்பாவோ, இரண்டு கட்டைப்பேனா, இரண்டு பேனா முள், ஒரு புட்டி மை இவைகளையே வாங்கித் தந்திருந்தார்.

அன்றைக்குப் பரீட்சையின்

கடைசி நாள். ராஜாராமன் பேனாவை மேஜையின் மீது வைத்துவிட்டு வினாக்களைப் படித்துக்கொண்டிருந்தான். திடீரென்று பேனா தவறிக் கீழே விழுந்துவிட்டது. உடனே அதன் முள்முனை உடைந்து விட்டது. அப்பொழுது அவன் திரும்பிப் பார்த்தான் பக்கத்தில் இரண்டு கட்டைப் பேனாக்களோடு நான் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அங்கு நின்றுகொண்டிருந்த ஆசிரியரிடம் பேனா உடைந்த விஷயத்தைக் கூறினான். அவரிடமும் அப்போது பேனா இல்லை.

உடனே, நான் என்னிடமிருந்த ஒரு கட்டைப் பேனாவை அவனிடம் கொடுத்தேன். அதைத் தொட்டு எழுத மை வேண்டுமே! என்னிடமிருந்த மைப்புட்டி மூடியில் கொஞ்சம் மையை ஊற்றிக்கொண்டு மீதமிருந்த மையுடன், மைப்புட்டியையும் அவனிடம் கொடுத்தேன். என் கட்டைப் பேனா, மைப்புட்டி இரண்டின் உதவியுடன், அவன் எழுதி முடித்தான்.

ராஜாராமனும் நானும் வெளியே வந்தோம். அப்பொழுது ராஜாராமன் என்னைக் கூப்பிட்டு, "நீ என்னுடன் மூன்று வருடங்களாகப் படித்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் நீயும், நானும் இதுவரை பேசியறியோம். முன் பின் அறிமுகமற்ற எனக்குப் பரீட்சையில் நீ உதவினாய். மிகவும் நன்றி என் வீட்டிற்கு வா" என்று என்னை அழைத்துச் சென்றான்.

அவன், அப்பாவிடம் என்னைப்பற்றிக் கூறினான். நானும் என் குடும்ப நிலையை அவரிடம் கூறினேன். அதற்கு அவர், "தம்பீ! நீ அடிக்கடி இங்கே வந்துபோ. நானே உனக்கு வேலை தருகிறேன்" என்றார். இப்படியாக மூன்று மாதங்கள் கழிந்தன. பரீட்சை முடிவும் வெளியிடப்பட்டது. நானும், ராஜாராமனும்தேறிவிட்டோம்.

அன்று, அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவன் அப்பா, என்னிடம், "தம்பி, என் 'பாங்கில்' குமாஸ்தா வேலை ஒன்று காலியாயிருக்கிறது. நீ அதை ஏற்றுக் கொள்கிறாயா?" என்றார்.

அதற்கு நானும் சம்மதித்தேன். அதற்கடுத்த வாரத்திலிருந்து வேலையையும் ஏற்றேன். படிப்படியாக மேலே வந்தேன் வருவாயில் சிறிது சிறிதாகச்சேமித்து வைத்தேன். சற்று நாட்களுக்குள் ஒரு வீட்டிற்குச் சொந்தக்காரனானேன். பிறகு உன் அப்பாவையும் நன்றாகப் படிக்க வைத்தேன். இப்பொழுது, அதன்பயனாகத்தான் உன் அப்பா ஒரு கம்பெனியில் மானேஜர் பதவி வகிக்கிறார். நாம் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் என் பேனாவின் உதவி தானே! ஆகவே, ராஜாராமன் எனக்கு ஓர் உயர்ந்த பேனாவைத்

தந்தான்.

இப்பொழுது ராஜாராமன் ஒரு மந்திரியாக இருக்கிறார். அவரால்தானே நாம் முன்னேறினோம். ஆகவே, அவர் தந்த அருமைப் பேனாவை உனக்குக் கொடுக்கலாமா? நீயே சொல்?" என்று கேட்டார்.

உடனே வேலு, "தாத்தா, அந்தப்பேனா சாதாரணப் பேனா என்றல்லவா நினைத்தேன்! அது இப்படிப்பட்ட 'பரிசுப் பேனா' என்று தெரிந்திருந்தால் நான் அதைக் கேட்டே இருக்க மாட்டேன், தாத்தா," என்றான்.

○

இப்போது பறக்க வேண்டாம்!

மாணவர்கள் அன்றாட அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளாதிருக்கும்படி புத்திமதி கூறுகிறேன். ஒரு தாய்ப் பறவை, தன் குஞ்சுகளிடம், 'நீங்கள் இப்போது பறக்கவேண்டாம்; இறக்கைகள் வலுப்பெறுகிற வரையில் பொறுமையாக இருங்கள்' என்று கூறுவதுபோலவே நானும் கூறுகிறேன்.

நீங்கள் இன்னும் சிறிது பொறுமையுடன் இருங்கள். உங்களுடைய இறக்கைகள் இன்னும் வலுவடையட்டும். —ராஜாஜி

★

எந்த நேரத்தையும் இனிமையாக்குவது

எம். ஏ. பி. மிட்டாய்கள்

சுத்தமான தயாரிப்பு: நேர்த்தியான மணம்.
எங்கும் கிடைக்கும்.

தயாரிப்போர்:

எம். ஏ. பி. இண்டஸ்ட்ரீஸ்

(Lessees of Shiyali Confectionery Ltd.)
362/364, திருவொற்றியூர் ஹைரோடு,
சென்னை-21

தந்தி: "MAPINDUS" போன்: 2583

விற்பனை நிலையங்கள்: விஜயவாடா, பெங்களூர் சிடி.

கேளுங்கள் பதில் சொல்லுகிறோம்

○ கடவுளிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

—என். அன்பரசு, தஞ்சை.

நம்பிக்கை உண்டு. ஆனால், மூட நம்பிக்கை கிடையாது.

○ ஹாலிவுட் எங்கேயுள்ளது? அதைப்பற்றிக் கொஞ்சம் விவரமாகக் கூறுங்கள்.

—S. இருதயசாமி, வல்லம்.

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் ஹாலிவுட் இருக்கிறது. அது ஓர் அழகிய நகரம். அந்தப் பிரதேசத்தில் வீசும் சூரியஒளி படம் பிடிப்பதற்கு மிகவும் ஏற்றதாக இருப்பதால், அங்கு பல ஸ்டூடியோக்கள் ஏற்பட்டன. இப்போது, அது ஒரு சினிமா நகரமாகவே விளங்குகிறது. நடிகர்கள், நடிகைகள், படப் பிடிப்பாளர்கள், சினிமா நிபுணர்கள் எல்லோரும் அங்கு வசித்து வருகின்றனர்.

○ தபால் பெட்டி எண் உங்களுக்கு எவ்விதத்தில் உதவுகிறது?

—R. பொன்னுச்சாமி, திண்டுக்கல்.

தபால் நிலையத்தில் புறாக் கூண்டுபோலப் பல பெட்டிகள் வரிசையாக இருக்கும். அந்தப் பெட்டிகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். பெட்டியின் முன் பக்கத்தில் கதவு இருக்கும். பின் பக்கத்தில் கதவு இராது; திறந்த வெளியாகவே இருக்கும். வெளிக் கதவுக்குச் சாவி உண்டு.

'அண்ணா, உனக்குப் பற்கள் எத்தனை?'

'அண்ணா, உன்னை நான் பார்க்க முடியுமா??'

'அண்ணா, உனக்கு என்னென்ன பிடிக்கும்?'

இம்மாதிரி உபயோகமில்லாத கேள்விகளைச் சிலர் அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். தயவு செய்து இம்மாதிரிக் கேள்விகளை எவருமே கேட்க வேண்டாம்.

நீங்கள் கேட்கும் கேள்விகள் ஒவ்வொன்றும் நல்ல கேள்வியாக இருக்கட்டும். அதனால் உங்களுக்கும் பயனுண்டு; பிறருக்கும் பயனுண்டு.

தினந்தோறும் ஏராளமான கேள்விகளை நீங்கள் அனுப்புகிறீர்கள். சீக்கிரம் பதில் வரவில்லையே என்றும் சிலர் வருத்தப்படுகிறீர்கள். என்ன செய்வது? எல்லாவற்றிற்கும் பதில் எழுத இடமில்லையே! கூடுமானவரை உபயோகமான கேள்விகளுக்குப் பதில் அளிப்போம். தயவு செய்து பொறுத்திருங்கள்.

அந்தச் சாவியை நம்மிடம் கொடுத்து விடுவார்கள்.

கடிதங்கள் வந்ததும், அந்தந்தப் பெட்டிகளில் கடிதங்களைப் பிரித்து உட்பக்கமாகப் போட்டு விடுவார்கள். உதாரணமாக 'தபால் பெட்டி எண் 1803' என்று குறிப்பிட்டு ஒரு கடிதம் வந்தால், அதை 1803-ம் எண்ணுள்ள பெட்டியில் போட்டு விடுவார்கள். நாம் சாவியை எடுத்துக்கொண்டு போய் வெளிப் பக்கமாக உள்ள கதவைத் திறந்து, நமக்குள்ள கடிதங்களை எடுத்து வரலாம்.

இதனால், தபால்காரர் நம்வீடு தேடி வரும்வரை நாம் காத்திருக்க வேண்டியதில்லை நேராக நம்முடைய ஆளை அனுப்பி, வெகு சீக்கிரத்தில் கடிதங்களை எடுத்து வந்துவிடலாம். அத்துடன் கடிதம் எழுதுகிறவர்களும் வீட்டு எண், வீதிப்பெயர் முதலியவற்றை ஞாபகம் வைத்துக் கொள்வதைவிட தபால் பெட்டி எண்ணை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டாலே போதும்!

நமக்காக இப்படி ஒரு தபால் பெட்டியை ஏற்படுத்த நாம் வருஷம் ஒன்றுக்கு ரூ. 12 கட்டணம் செலுத்த வேண்டும்.

○ உப்புப் போட்டுப் பல் துலக்குவது நல்லதா?

—M. கிருஷ்ணவேணி, சென்னை 4.

நல்லதுதான். ஆனால், சமையலுக்கு உபயோகப்படுத்தும் உப்பைப் பொடி செய்து உபயோகப்படுத்த வேண்டாம்.

'டேபிள் சால்ட்' என்ற உப்பை உபயோகிப்பதே நல்லது.

○ பிரகாசமாக எரிகிறதே குழாய் விளக்குகள் அவை கீழே விழுந்து உடைந்தால் மிகவும் ஆபத்து என்கிறார்களே, உண்மைதானா?

—C. S. பஞ்சாபகேசன் சென்னை 3.

ஆம். அவைகள் சரியாகப் பொருத்தப்படாமல் இருந்தால், கீழே விழுந்துவிடும். அப்படி அது விழுந்துவிட்டால், உடைந்த குழாய்க்குள்ளிருந்து ஒரு விதத் தூள் பறந்து வரும். அச்சமயம், நாம் அருகே நிற்கக்கூடாது. பேசாமல் கதவுகளை மூடிக்கொண்டு வெளியில் சென்று விடவேண்டும். பிறகு, சிறிது நேரம் சென்று கீழே கிடக்கும் உடைந்த துண்டுகளைத் துடைப்பத்தின் உதவியால் அகற்றவேண்டும். கையால் அவைகளைத் தொடக்கூடாது!

○ உலகத்தில் நடக்கும் அநீதிகளுக்குக் காரணம் என்ன?

—எஸ். பாண்டியன், கோவை.

'உலகத்தில் நடக்கும் அநியாயங்களில் ஒரு பாதிக்குக் காரணம் பண ஆசை; மறுபாதிக்குக் காரணம் பணம் இல்லாத குறை' என்கிறார், ஓர் அறிஞர். அவர் கூறுவதை நான் அப்படியே ஆமோதிக்கிறேன்.

○ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து சமீபத்தில் விலகினரே ட்ரூமன், அவர் ஜனாதிபதியாவதற்கு முன் என்ன செய்தார்?

—டி. நவநீதன், சென்னை 4.

ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாக இருந்தபோது, அவர் உதவி ஜனாதிபதியாக இருந்தார். அதற்கு முன்னால், ராணுவத்தில் இருந்தார். அதற்கும் முன்னால் மருந்துக் கடையில் ஒரு சிப்பந்தி

யாகவும், ஜன்னல் கழுவுகிறவராகவும் இருந்திருக்கிறார். ஒரு பாங்கிலே குமாஸ்தாவாகவும் வேலை பார்த்திருக்கிறாராம்.

○ **நமது மாகாணத்தில் மொத்தம் எத்தனை மாணவ மாணவிகள் படிக்கிறார்கள்?**

—S. கருப்பையா, திருப்பத்தூர்.

இந்தக் கேள்வியை என்னிடத்தில் நீ கேட்பது போலவே, சமீபத்தில் சட்டசபையில் கல்வி மந்திரியை ஒருவர் கேட்டார். அப்போது கல்வி மந்திரி கூறிய பதில் இதுதான்; 'சென்னை ராஜ்யம் முழுவதிலும் கல்லூரிகள் உள்பட மொத்தம் 32,53,995 மாணவர்களும், 16,17,458 மாணவிகளும் படிக்கிறார்கள்.'

○ **நமது தமிழ்நாட்டில் கொஞ்ச காலமாக உணவு நெருக்கடி ஏன் வந்தது?**

—எம். பி. அகமது, நாகூர்.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல; இந்தியாவின் பல பாகங்களிலும் இந்தக் கஷ்டம் ஏற்பட்டது. காரணம், பருவ மழை இல்லாததுதான்.

○ **நெருப்புப் பெட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?**

—என். சிதம்பரம், காரைக்குடி.

வான் சாட்டர் என்ற ஐரோப்பியர்.

○ **எனக்கு, பிரான்ஸில் ஒரு நண்பன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனிடத்தில் நான் ஒரு பெரிய கடிகாரம் (wall clock) பெறவேண்டியிருக்கிறது. அதற்குண்டான பணத்தை எந்த வழியில் செலுத்தவேண்டும்? கடிகாரத்தை எந்த வகையில் பெறவேண்டும்? கடிகாரத்தை அங்கு வாங்கிய விலைக்குமேல் இங்கு அதிகப்படியாகப் பணம் வசூலிப்பார்களா? தயவு செய்து விளக்கமாகச் சொல்லுங்கள்.**

—R. சொக்கலிங்கம், செவ்வாய்ப் பேட்டை, சேலம்.

பாங்கு மூலமாகப் பணம் அனுப்பலாம் ஆனால், முன் பணம் அனுப்ப எந்த பாங்கிலும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். கடிகாரம் வந்த பிறகே, பணம் அனுப்பவேண்டும். கப்பல் அல்லது ஆகாயவிமானம் மூலமாக கடிகாரத்தை வரவழைக்கலாம். அதற்குரிய தொகையை ஒரு பாங்கு மூலம் அனுப்புவதாகக் கூறி பிரான்ஸ் நண்பனுக்கு எழுதினால், அவன் கடிகாரத்தை அனுப்பிவிட்டு அதை இங்கு பெறுவதற்கான ரசீதை பாங்கு மூலம் அனுப்பிவிடுவான். பாங்கில் கடிகாரத்துக்குரிய பணத்தைக்கட்டி, ரசீதை வாங்கிக் கடிகாரத்தைப் பெறலாம். கடிகாரத்தைப் பெறும்போது, தீர்வை செலுத்தவேண்டும்.

○ **கொட்டாவி ஏற்படுவது ஏகனால்?**

—A. பழநியாண்டி, போடிநாயக்கனூர்.

தூக்கம் வரும்போது, அல்லது களைத்துப் போயிருக்கும்போது எப்போதும் போல நாம் நன்றாக மூச்சை இழுத்து வெளிவிடுவதில்லை. இதனால், இரத்தத்திற்குப் போதிய பிராணவாயு கிடைப்பதில்லை. அப்போது தான், நாம் கொட்டாவி விடுகிறோம். கொட்டாவி விடும்போது வாயை நன்றாகத் திறந்து அதிகமான காற்றை நாம் சுவாசிக்கிறோம். இரத்தத்திற்கு வேண்டிய பிராணவாயு கிடைத்துவிடுகிறது.

○

அவசியம் வேண்டுமெனக் கேளுங்கள்

எல். ஜி.

நல்ல சமையலுக்கு முதலில் வேண்டியது;
நல்ல மணம் அளிப்பது;
பெருங்காயங்களில் சிறந்து விளங்குவது

எல். ஜி. பெருங்காயமே!

முக்கியமான எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

அல்லது

கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்

லால்ஜி கோது அண்டு கம்பெனி

பெருங்காய வியாபாரிகள்

சௌகார்ப்பேட்டை, சென்னை-1.

★

தலைமை ஆபீஸ் :
பம்பாய்-3.

கிளை :
கும்பகோணம்.

5. அபாண்டப் பழி!

மனோஹரனை அந்த வீட்டில் இருந்தவர்களில் ஒருவர்கூட மதிக்கவில்லை. 'எவனோ ஒரு தண்டச் சோற்று ராமன்' என்றுதான் மனோஹரனை நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

அம்மாவோ இம்மாதிரியான இக்கட்டான நிலையில் 'ஏன் இங்கே வந்தோம்?' என்று நினைக்க ஆரம்பித்தாள். அவள் ஒருத்திதான் மனோஹரனுக்கு ஆதரவு. துயரம் மிகுந்து, நெஞ்சம் குமுறித் தனிமையில் உட்கார்ந்து அவன் அழும்போது, அவன் கண்களைத் துடைத்து அவனுக்கு ஆறுதல் சொல்வதும் அவள்தான்!

ஒரு நாள் சேகரன் (அவன்தான் அம்மாவின் அண்ணன் மகன்) அவனுடைய அம்மாவிடம்போய், "அம்மா, என்னுடைய மேஜை அறையில் வைத்திருந்த எட்டணாவைக் காணோம்" என்று அழ ஆரம்பித்தான்.

உண்மையில் அவனுடைய எட்டணாக் காசு தொலைந்து போகவில்லை. அதை அவன் ஏற்கனவே செலவு செய்துவிட்டான். 'தொலைந்து போய்விட்டது' என்று அம்மாவிடம் சொன்னால், 'போனால் போகிறது' என்று மறுபடியும் அவள் காசுகொடுத்தாளானால் அதை வாங்கிக்கொண்டு சினிமாவுக்குப் போகலாம் என்பது தான் அவனுடைய திட்டம்.

"என்ன இது! மேஜை அறையிலிருந்த எட்டணாவைக் காணோமா! எந்தத் திருடன் வந்து தூக்கிக்கொண்டு போய்விடுவான்? இத்தனை நாளும் இல்லாமல் இப்போது புதிதாக இருக்கிறதே! யார் எடுத்திருப்பார்கள்? ஒருவேளை, அந்தத் தண்டச் சோற்றுப் பையன் எடுத்திருப்பானோ!"

"இருக்கலாம், அம்மா!" என்று வாய் கூசாமல், புளுகிவைத்தான் சேகர்.

அவனுக்குத் தேவையானது எட்டணா. அதற்காக எத்தனை பொய்கள் வேண்டுமானாலும் அவன் சொல்லத் தயாராயிருந்தான். 'நிரபராதியான ஒருவன் பேரில் திருட்டுப் பட்டம் கட்டுகிறோமே!' என்ற நினைப்பு துளிக்கூட அவனுக்கு இல்லை!

"வரவர இந்தவீட்டில் அதிகமாகத் திருட்டுப்போக ஆரம்பிக்கிறதே! அன்றைக்குக்கூட மாடத்தில் ஒரு ரூபாய் வைத்திருந்தேன், அதைக்கூடக் காணவில்லை!" என்று கத்தினாள், சேகரின் அம்மா.

அந்த அம்மாளுக்கு மறதி அதிகம். ஓரிடத்தில் வைத்துவிட்டு இன்னோர் இடத்தில் தேடுவாள். அவள் மாடத்தில் வைத்துக் காணமற் போய்விட்டதாகச் சொல்லும் அந்த ஒரு ரூபாய், சமையலறையில் உள்ள ஜன்னலில் மிளகாய்ப் பெட்டிக்கு அடியில் பத்திரமாகஇருக்கிறது! அங்கே வைத்தவளும் அவள்தான். மறதியாக மாடத்தில் வைத்ததாகச் சொல்லிவிட்டு, அந்தப் பணம் திருட்டுப் போய்விட்டதாகவும் சொல்லுகிறாளே! ஐயோ! இது எங்கே போய் முடியுமோ?

அன்றையத்தினம் இரவு சேகரின் அம்மா தன் கணவன் வந்ததும், "உங்கள் தங்கையுடன் வந்திருக்கிறானே, அவன் பொல்லாத திருட்டுப் பயல். அவனுக்குக் கை நீளுகிறது" என்றாள்.

"ஏன்? என்ன நடந்தது?" என்று திருப்பிக் கேட்டார், அவர்.

"என்னவா? நான் மாடத்தில் வைத்திருந்த ஒரு ரூபாயைக் காணோம்! அத்துடன் நமது சேகர், மேஜையிலே வைத்திருந்த எட்டணாவையும் காணோம்! அவன்தான் எடுத்திருக்க வேண்டும். இந்த வீட்டில் வேறு யார் இருக்கிறார்கள்?" என்றாள் சேகரின் அம்மா.

"அவனா எடுத்தான்!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார், சேகரின் அப்பா.

"பின்னே, நானா பொய் சொல்கிறேன்? இத்தனை நாளும் இல்லாமல் இப்போதுதானே இப்படித் திருட்டுப் போகிறது? என்றைக்கு அந்தப் பயல் இந்த வீட்டில் அடியெடுத்து வைத்தானோ.........." என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, இத்தனை நேரமும் மறைவாக இருந்து அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த அம்மா, அவள் முன்னால் வந்து "அண்ணி, இம்மாதிரியெல்லாம் மனோஹரின்மேல் அபாண்டமாகப் பழி சொல்லாதீர்கள். அவன் அப்படிப்பட்டவன் அல்ல" என்றாள்.

"நீ வேறு அவனுக்குப்பரிந்து பேச வந்து விட்டாயா? அவன் திருடுகிறதில் உனக்கும் பங்கு தருகிறானோ, என்னவோ? அவனைப் பார்த்தாலே தெரிகிறதே! அவன்தான் எடுத்திருப்பான். நான் எந்தக் கோயிலில் வேண்டுமானாலும் சத்தியம் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று படபடப்பாகப் பேசினாள், அண்ணி.

"அண்ணா, அண்ணி சொன்னதைக் கேட்டீர்களா? மனோஹரனைத் திருடன் என்கிறாள். அத்துடன், அவன் திருடி வருவதில் நானும் பங்கு பெறுகிறேன் என்கிறாள். பார்த்தீர்களா அண்ணா! நான் அன்றைக்கே 'வரமாட்டேன், வரமாட்டேன்' என்று சொன்னேன். என் பேச்சைக் கேட்டீர்களா, அண்ணா!" என்றாள் அம்மா.

அவளுடைய அண்ணன்—சேகரின் அப்பா ஒன்றுமே பேசவில்லை. வாயை மூடிக்கொண்டு மௌனப் பிள்ளையாரைப் போல் இருந்தார்.

"உன்னை யார் இங்கே, 'வா வா' என்று வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தார்கள். நீதான் உன் அண்ணன் வீட்டுக்கு வந்தாய். உனக்கு இங்குவர உரிமை உண்டு. உனக்குச் சாப்பாடு போடவேண்டியது உன் அண்ணாவின் கடமை. ஆனால், எவனெவனோ, ஊர் பேர் தெரியாத பையன்களுக்கெல்லாம் தண்டச்சோறு போட இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது? இது தர்ம சத்திரமா?" என்று மூச்சு விடாமல் பேசினாள், சேகரின் அம்மா.

"அண்ணா, நான் மறுபடியும் காட்டூருக்கே போய்விடுகிறேன். இனி ஒரு நிமிஷம்கூட இந்த வீட்டில் இருக்க மாட்டேன்" என்று அழுதுகொண்டே தன் அண்ணனிடம் சொன்னாள், அம்மா.

"போகிற விஷயத்தைப் பற்றி நாளைக்கு யோசிப்போம். உள்ளே போ, அம்மா!" என்று அம்மாவைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார் சேகரின் அப்பா.

அம்மா அழுதுகொண்டே 'ஹாலு'க்குள் நுழைந்தாள். அங்கே மனோஹரன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

'ஐயோ, ஆதரவில்லாத இந்தச் சிறுவனின்மீது இப்படிப் பழி சுமத்துகிறார்களே!' என்று வருத்தப்பட்டுக் கொண்டே வந்து, அவன் பக்கத்தில் படுத்தாள், அம்மா.

இரவு மணி பதினொன்று இருக்கும். எல்லோரும் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். வெகு நேரம் அழுதுகொண்டே படுத்திருந்த அம்மாவும் தூங்கிவிட்டாள். அப்போது மனோஹரன் தன் படுக்கையிலிருந்து மெள்ள எழுந்து உட்கார்ந்தான்; சுற்றுமுற்றும் பார்த்தான்; எல்லோரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்; மெதுவாக சேகருடைய மேஜை அருகே சென்றான்; மேஜைமேல் இருந்த பேனாவை எடுத்தான்; தனியாக இருந்த ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்தான்; எடுத்துக் கொண்டு தன் படுக்கையருகில் வந்து உட்கார்ந்தான்; 'பெட்ரூம்' விளக்கைப் பெரிதாக்கிக் கொண்டான்; எழுத ஆரம்பித்தான்:

"அருமை அம்மாவுக்கு,

என்னுடைய தாழ்ந்த வணக்கங்கள். என்னால் தங்களுக்கு மிகவும் சிரமம். தாங்கள் மட்டுமே இங்கிருந்தால் தங்களுக்கு ஒரு குறையும் இருக்காது. தங்களுடைய அண்ணனும், அண்ணியும் எனக்குத் தண்டச்சோறு போடுவதைத்தான் வெறுக்கிறார்கள். அவர்கள் என்னைக் கேட்கும் ஒவ்வொரு வார்த்தையும் என் நெஞ்சிலே ஈட்டியால் குத்துவது போலிருக்கிறது. உண்மையாகச் சொல்லுகிறேன். எனக்கு இங்கு வரவே பிடிக்கவில்லை. உங்களால்தான் வந்தேன்; இப்போது அல்லல்படுகிறேன். நான் மட்டுமல்ல; என்னால் நீங்களும் இங்கே அல்லல் படு

கிறீர்கள். வேண்டாம் அம்மா, வேண்டாம்! நான் யாரோ? எனக்காக நீங்கள் இங்கே கஷ்டப்படவேண்டாம். நீங்களாவது உங்களுடைய அண்ணன் வீட்டில் சௌக்கியமாக இருங்கள். நான் போய் வருகிறேன். என்னைப் பிரிந்திருக்க வருத்தப்படுவீர்களென்ற விஷயம் எனக்குத் தெரியாததல்ல. ஒரேசமயத்தில் இரண்டுபேர் வருத்தப்படுவதைவிட ஒருவராவது சுகமாக சந்தோஷத்துடன் இருப்பது நல்லதல்லவா? என்னை மறந்துவிடுங்கள். தங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை. நான் போகிறேன். ஆனால், அப்படியே உங்களை மறந்துபோய்விடுவேன் என்று மட்டும் நினைக்காதீர்கள். இன்னும் கொஞ்ச நாள் கழித்து நிறையப் பணம் சம்பாதித்துக்கொண்டு இங்கே வந்து தங்களைக் கூட்டிப்போகிறேன். அதுவரையில் என்னை மறந்து இங்கேயே சுகமாக இருங்கள். நான் வருகிறேன்.

அன்புள்ள,

மனோஹரன் ''

கடிதத்தை எழுதி முடித்துவிட்டு, அக்கடிதத்தை எடுத்து வந்து அம்மாவின் தலையணையை மெதுவாகத் தூக்கி அங்கேவைத்தான்,மனோஹரன். கொஞ்சநேரம் தூங்கிக்கொண்டிருக்கும் அம்மாவின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். 'ஐயோ, பெற்ற தாயைவிட இவள் என்னிடம் எவ்வளவு அன்பாக இருந்தாள்! தன்னுடைய உயிரையே என்னிடமல்லவா வைத்திருந்தாள்! இப்படிப்பட்ட அம்மாவை விட்டுப் பிரிந்து எப்படிச் செல்வது?' என்று வருத்தப்பட்டுக் கொண்டே நின்றான்.

பிறகு, 'வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? அம்மா விழித்துக்கொண்டால், நம்முடைய திட்டம் நிறைவேறாது. நம்மை அனுப்ப அவள் சம்மதிக்கமாட்டாள். அவள் விழித்துக் கொள்வதற்குள் போய்விடவேண்டும்' என்று தீர்மானித்தவனாய் வெளியே செல்லத்தொடங்கினான். அவன் அந்த ஊருக்கு வந்த புதிதில் ஊரையெல்லாம் நன்றாகச் சுற்றிப் பார்த்து 'ரயில்வே ஸ்டேஷன்' எங்கிருக்கிறது; 'பஸ் ஸ்டாண்டு' எங்கிருக்கிறது என்பதையெல்லாம் அறிந்து வைத்திருந்தான். எனவே அந்த அர்த்தராத்திரி வேளையில் ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல அவன் சிரமப்படவில்லை.

ஊரெல்லாம் அமைதியாக இருந்தது. எங்கோ தூரத்தில், பாராக்காரர்களின் கூச்சல் கேட்டது. இத்தனை நேரமாகக் கண்களை மூடிக் கொண்டு அரைத்தூக்கத்தில் இருந்த தெருநாய் ஒன்று மனோஹரனைக்கண்டதும் 'வள் வள்' என்று குரைக்க ஆரம்பித்தது.

அந்த நாயின் கூச்சலைக் கேட்டதும் மற்ற நாய்களும் தங்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்தே, 'வள், வள்' என்று ஒத்துப்பாட ஆரம்பித்தன.

மனோஹரன் எதையும் சட்டைசெய்யாமல் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்துகொண்டிருந்தான். ரயில்வே ஸ்டேஷன்கூடத் தூங்கி வழிந்து கொண்டிருந்தது. அந்த ஸ்டேஷனில் நின்றுவிட்டுப் போகும் வண்டிகளெல்லாம் வந்து போய்விட்டன. ஸ்டேஷன் மாஸ்டர் தம்முடைய அறையைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார். ஸ்டேஷனுக்கு வெளிப்புறமாக அழுக்கேறிய மண்ணெண்ணெய் விளக்கு ஒன்று அழுது வடிந்து கொண்டிருந்தது.

மனோஹரன் ஸ்டேஷனுக்குள் சென்று பிரயாணிகள் தங்குமிடத்தில் பார்த்தான். இரண்டு மூன்று பிச்சைக்காரர்களும், ரயிலைத் தவறவிட்ட ஒரு குடும்பமும் அங்கே படுத்துக் கொண்டிருந்தனர். மனோஹரனும் அங்கேயே படுத்துக் கொண்டான்.

இரவெல்லாம் அவனுக்குத் தூக்கமே இல்லை. கொசுக்கடி வேறு. தூங்கிவிட்டிருந்தாலாவது கொசுக்கடி

உபத்திரவம் ஓரளவு தெரியாது. மனோஹரன் அடிக்கடி முதுகிலும், காலிலும் வந்து உட்கார்ந்து 'இஞ்செக்ஷன்' செய்யும் கொசுக்களை 'பட், பட்' டென்று அடித்ததோடல்லாமல், 'விருட், விருட்' டென்று கொசு கடித்த இடங்களைச் சொறிந்து கொண்டிருந்தான்.

பட்டணத்துக்குப் போகும் முதல் வண்டி அந்த ஸ்டேஷனில் விடியற்காலை நான்கு மணிக்கு வந்து நிற்கும் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான்.

மணி மூன்றரை ஆனதுமே ஸ்டேஷன் மாஸ்டரும், போர்ட்டரும் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். போர்ட்டர் அணைந்து போயிருந்த இரண்டு விளக்குகளை ஏற்றினான். ஸ்டேஷன் மாஸ்டர் தம்முடைய அறைக் கதவைத் திறந்துகொண்டு தம்முடைய வேலையில் ஈடுபட்டார்.

அந்த ஸ்டேஷன் ஒரு சின்ன ஸ்டேஷன். அங்கே ஸ்டேஷன் மாஸ்டராக இருப்பவரே, 'டிக்கெட்' விற்பனை செய்பவராகவும், 'டிக்கெட்' பரிசோதகராகவும், சமயத்தில் 'போர்ட்டர்' வராது போனால் அவரே 'போர்ட்டராகவும்' இருக்கக் கூடியவர்.

ஸ்டேஷன் மாஸ்டர் வந்தவுடனே தூங்கிக்கொண்டிருந்த பிரயாணிகள் எழுந்திருந்து 'டிக்கெட்' கொடுக்குமிடத்தில் பணம் கொடுத்து 'டிக்கெட்' பெற்றுக் கொண்டார்கள்.

மனோஹரன் மட்டும், 'டிக்கெட்' வாங்கவில்லை. நேரே 'பிளாட்பார'த்துக்குப் போய் வண்டியின் வரவை எதிர் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அந்தச் சின்ன ஸ்டேஷனில், யார் டிக்கெட் வாங்கினார்கள், யார் வாங்கவில்லை என்பதைப் பரிசோதிக்க யார் இருக்கிறார்கள்?

'டிக்கெட்' இல்லாமல் பிரயாணம் செய்வது தப்பு; அம்மாதிரிப் பிரயாணம் செய்யக் கூடாது என்றுதான் மனோஹரன் நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால், 'டிக்கெட்' வாங்கப் பணம்......? அதற்காக 'டிக்கெட்'

"ஏண்டா ரமணி, ஒன்றிலே அறுபது போகுமா?"

"ஓ! 60 என்ன, 120 கூடத் தாராளமாகப் போகும்"

"அது எப்படியடா?"

"ஒரே ஒரு பள்ளிக் கூடத்துக்குள்ளே நாங்கள் 120 பேர் போகிறோமே!"

—S. P. சுப்பையா, காரைக்குடி

வாங்காமல் திருட்டுத்தனமாக ரயிலில் ஏறுவதா?

நான்கு மணிக்குப் பட்டணம் போகும் வண்டி அந்த ஸ்டேஷனில் வந்து நின்றது. மனோஹரன் 'சட்'டென்று ஒரு பெட்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

அந்தப் பெட்டியில் இருந்த அத்தனை பேரும் தூங்கி வழிந்துகொண்டிருந்தார்கள். சிலர், வண்டி நின்றதும், "என்ன ஸ்டேஷன்?" என்று கேட்டுவிட்டு மறுபடியும் தூங்க ஆரம்பித்து விட்டார்கள்.

வண்டி புறப்பட்டது. 'ஜில்'லென்று ஜன்னல் வழியாக வீசிய காற்றில் மனோஹரனும் சற்று நேரத்திற்கெல்லாம் தூங்கிப் போய்விட்டான்!

தூங்கும்போது அவன் ஒரு கனவு கண்டான். அவன் பட்டணத்திற்குப் போய் எப்படியோ ஒரு பெரிய பணக்காரனாகி விடுகிறான். எப்படிப் பணக்காரனாகிறான்? அது அவன் கனவில் வராத விஷயம்? அவன் பெரிய பணக்காரனாக ஆனதிலிருந்

தேதான் அவன கனவு ஆரம்பிக்கிறது. அம்மாளைக் கூட்டி வருவதற்காகப் பெட்டி படுக்கையுடன் 'டாக்ஸி'யில் வந்து ரயில்வே ஸ்டேஷனில் இறங்குகிறான். சட்டைப் பையில் இருந்த 'மணிபர்'ஸை எடுத்துப் பிரிக்கிறான். அதில் புத்தம் புதிய நோட்டுக்கள்! அவ்வளவும் நூறு ரூபாய் நோட்டுக்களும், பத்து ரூபாய் நோட்டுக்களும் தான்! பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அலட்சியமாக, 'சமயபுரத்துக்கு இரண்டாம் வகுப்பு டிக்செட் ஒன்று' என்கிறான். டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தா ஜன்னல் வழியாக அவன் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டுக் கொஞ்சநேரம் தயங்குகிறார். பிறகு 'டிக்கெட்'டை அடித்துக் கொடுக்கிறார்.

'எவ்வளவு சின்னப் பையன்! இவனிடம் ஏது இவ்வளவு பணம்? பெரிய பணக்கார வீட்டுப் பையனாயிருப்பானோ? அல்லது, எங்கேயாவது திருடிக்கொண்டு வந்திருப்பானோ!' என்று 'டிக்கெட்' கொடுக்கும் குமாஸ்தா நினைத்தாரோ, என்னவோ?

'அப்படியேதான் அவன் திருடி எடுத்து வந்திருந்தாலும், அந்தப் பணத்திற்கு டிக்கெட் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியுமா? பணம்கொடுத்தால் டிக்கெட் கொடுக்க வேண்டியது அவர் கடமை! அதை விட்டுவிட்டு 'இது திருட்டுப் பணமா? நல்ல பணமா?' என்று கேட்பதற்கா அவருக்குச் சம்பளம் கொடுத்து உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள்?

"எய் தம்பி, டிக்கெட்டை எடு" என்ற குரலைக் கேட்டதும், மனோஹரனின் கனவும், தூக்கமும் கலைந்து விட்டன. கண்ணை விழித்து எதிரே பார்த்தான். 'டிக்கெட்' பரிசோதகர் நிற்பதைக் கண்டான்.

"டிக்கெட்டா? இல்லையே!" என்று திரு திருவென்று விழிக்க ஆரம்பித்தான், மனோஹரன்.

"என்ன, டிக்கெட் இல்லாமலேயா பிரயாணம் செய்கிறாய்! உன் அப்பன் வீட்டு வண்டி என்று நினைத்துக் கொண்டாயோ? இப்படி வா!" என்று சொல்லிக்கொண்டே 'பளார்' என்று அவன் கன்னத்தில் அறைந்தார், அந்த டிக்கெட் பரிசோதகர்.

அதே சமயத்தில் பெட்டியின் இன்னொரு மூலையில் பதுங்கிப் பதுங்கிப் போய்க் கொண்டிருந்தான், வேறொரு சிறுவன். அவனையும் டிக்கெட் பரிசோதகரின் கழுகுக் கண்கள் பார்த்து விட்டன. உடனே, "டேய், எங்கேயடா பதுங்குகிறாய்? இப்படி வாடா" என்று கூறிக்கொண்டே அவனையும் பிடித்து விட்டார்.

"உன்னிடத்திலேயும் டிக்கெட் இல்லையா! இந்தச் சின்ன வயதிலேயே உங்களுக்கு ஏண்டா இப்படிப் புத்தி போகிறது!" என்று சொல்லிக் கொண்டே அவனுக்கும் இரண்டு அறைகள் வைத்தார்.

"இந்தப் பெட்டியில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வது நாம் மட்டும்தான் என்று நினைத்திருந்தோம். நமக்குத் துணையாக இன்னொரு பையனும் இருக்கிறானே! பரவாயில்லை" என்று சற்று ஆறுதலடைந்தான், மனோஹரன்.

(தொடரும்)

"பையன்களா, இந்தியாவில் அதிக உற்பத்தி எது தெரியுமா?"
"தெரியும் சார், இந்தியர்கள்தான்!"
—V. மங்களம், சென்னை-14

மாணவர் மன்றம்

மாணவரும், கிளர்ச்சியும்.

மாணவர்கள் என்றாலே படிக்கிறவர்கள் என்றுதான் பொருள் கொள்ளுகிறோம். இளமைப் பருவம், கல்வி கற்பதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பருவத்திலே நாம் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய அறிவு, ஒழுக்கம், மரியாதை அனைத்தையும் கற்க வேண்டும். இவற்றை மறந்து, அரசியலில் பங்கெடுத்துக்கொண்டு கிளர்ச்சியில் ஈடுபடுவது சரியல்ல.

மாணவர்கள் எந்தக் கட்சியின் மீதாவது பற்றுக்கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், அந்தக் கட்சியார் நடத்தும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது அவசியமற்றது. கிளர்ச்சியில் ஈடுபட்டால், நம்முடைய மாணவப் பருவம் வீணாகிவிடும்.

மாணவர்கள் அரசியலில் தீவிரமாகப் பங்கு எடுத்துக் கொள்வது கூடாது என்று காந்திஜி கூறியிருக்கிறார். நாட்டின் முதுகெலும்பு போன்ற நாம் படிக்காத மக்களுக்கு எழுத்து அறிவித்தால், அதுவே நாட்டிற்கு நாம் செய்யும் பெரும் தொண்டு ஆகும்.

இராயவரம்
16-9-'52. R. M. ஸ்ரீனிவாசன்

புத்தகங்களைத் தணிக்கை செய்க.

நான் சமீபத்தில் சில புத்தகங்களைப் படித்தேன். எல்லாம் ஒரே கொலைமயம்! பயங்கரக் கொலைகளையும், மர்மக் கதைகளையும் படித்தால் வீரம் ஏற்படும் என்று சிலர் கதை விடுகிறார்கள்.

ஒரு பயங்கரக் கொலைக் கதையைப் படித்துவிட்டு என் எட்டு வயதுத் தங்கை மூன்று நாட்கள் ஜுரத்தில் படுத்துவிட்டாள்! ஏன் இந்த மாதிரிக் கதைகளை எழுதுகிறார்கள்? குழந்தைகளுக்காக வெளி வரும் புத்தகங்களையாவது சர்க்கார் கவனித்து வந்தால், நன்றாயிருக்கும்.

சினிமாக்களைப் பரிசீலனை செய்து வெளியிட அனுமதி கொடுப்பதற்கு 'தணிக்கை ஸ்தாபனம்' என்ற ஒன்று இருக்கிறதே, அதேபோல் எங்களுக்காக வரும் புத்தகங்களைத் தணிக்கை செய்யவும் ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டும்.

திண்டுக்கல்
11-10-'52. R. கண்ணப்பன்.

ஆங்கிலச் சொற்கள்

நம் தமிழ் நாட்டில் 'Keep to the left', 'One way traffic', 'walk on the platform' என்ற பல அறிக்கைப் பலகைகள் பாதைகளில் தொங்குகின்றன. சாதாரணமாகத் தமிழ் படிக்கத் தெரிந்த மக்களே நம் நாட்டில் மிகக் குறைவு. ஆங்கிலத்தைப் படித்து அவர்கள் தெரிந்துகொள்வது எப்படி? ஆதலால், அவ்வறிக்கைப் பலகைகளைத் தமிழில் எழுதிவைப்பது நல்லதென்று நினைக்கிறேன்.

திண்டுக்கல்
8-11-'52. R. கோபாலகிருஷ்ணன்

வேலனின் நண்பன்

எஸ். கௌரிசங்கரன்

வேலனின் தகப்பன் ஒரு மீன் பிடிக்கும் தொழிலாளி. அப்படி இருந்தும், தன் ஒரே மகனான வேலனை அவன் பள்ளியில் படிக்கவைத்தான். வேலனும் வெகு கருத்துடன் ஐந்தாம் வகுப்பு வரை படித்தான். அவனுக்கு அப்பொழுது வயது பன்னிரண்டு.

ஒரு நாள் வேலனை அவன் தகப்பன் கூப்பிட்டு, "டேய், வேலா! நீ படித்தது போதும். இனிமேல் நம்முடைய பரம்பரைத் தொழி

லேக்கவனி. நான் மீன் பிடிக்கப் போகும் நேரத்திலே நீயும் என்னேடு படகுக்கு வரவேணும். தெரிந்ததா?" என்று கேட்டான்.

வேலனும் சிறுவன்தானே! அவனுக்கும் கடலிலே பிரயாணம் செய்ய ஆசையாயிருந்தது. உடனே, 'சரி'யென்று தன் தகப்பனிடம் தலையை அசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான். அதுமுதல்கொண்டு தகப்பனும் மகனும் மீன் பிடிக்கச் செல்வது வழக்கம்.

நாளடைவில் வேலனும் மீன் பிடிப்பதில் தேர்ச்சி பெற்று விட்டான். ஒரு நாள் வேலனின் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. ஆகையால், வேலன் மட்டும் படகை எடுத்துக்கொண்டு மீன் பிடிக்கச் சென்றுன். முதலில், படகு லேசாக அலைகளில் மிதந்தது. பின்னர் அவனுக்கு வெகு குஷியாய்விட்டது. வாயில் வந்த பாட்டுக்களையெல்லாம் பாடிக்கொண்டே வெகு தூரம் சென்று விட்டான். பிறகு தான் வேலனுக்குச் சுய நினைவு வந்தது.

இது
குழந்தை எழுத்தாளர் சங்கச் சிறுகதைப் போட்டியில் 3-வது பரிசுபெற்ற அட்டைப்படக்கதை

அவன் என்றும் இவ்வளவு தூரம் வந்ததில்லை. மிகவும் பயந்தான். ஏன்?—கரை கண்ணுக்குப் புலப்படவேயில்லை! தன் குடிசை வீடும் தெரியவில்லை. வழியும் புலப்படவில்லை. வேலனுக்கு ஒரே திகிலாய் விட்டது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கை சோர்வடைந்தது. அவ்வளவுதான்; படகு தன் இஷ்டத்திற்கு ஓடியது. அவனுல், அதைக் கடத்திச் செல்ல முடியவில்லை. களைப்புஒரு பக்கம்; பசி ஒரு பக்கம். சிறிது நேரத்திற்கெல்லாம் படகிலேயே சாய்ந்து மயக்கமாய் விட்டான்.

வேலன் கண்விழித்துப் பார்க்கும்போது படகு அசையாமல் ஒரு மரத்தின் வேரினுல் தடைப்பட்டு நின்றிருந்தது. நேரமோ ஆறு மணியிருக்கும். வேலன் படகை விட்டு மெதுவாக இறங்கினுன். சுற்று முற்றும் பார்த்தான். எங்கும் ஒரே மரங்கள்! சிறிது தூரத்தில் ஒரு மலை தெரிந்தது.

வேலனுக்கு எப்பொழுதும் ஒரு பைத்தியம் உண்டு. அதாவது உண்டிவில் அடிப்பது. அவனுடைய குறி ஒருபோதும் தவருது. எப்பொழுதும் அது அவன் கையிலேயே இருக்கும். இப்பொழுதும் அது அவனிடத்தில் இருந்தது. நேரம் ஆக ஆக வேலனுக்கு ஒரே திகிலாய்விட்டது.

"இன்றிரவை எப்படிக் கழிப்பது? படுக்கை எங்கே? சாப்பாடு எங்கே? இனி, கடவுள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். தயங்குவதில் பிரயோசனமில்லை. பசிக்கு வழி தேட வேண்டும்" என்று எண்ணினுன்.

சுற்று முற்றும் பார்த்தான். மரங்களில் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. எடுத்தான், உண்டிவில்லை. குறிவைத்தான், பழங்கள் மீது. 'பொத், பொத்'

199248

என்று பழங்கள் விழுந்தன. அவைகளைப் பொறுக்கிக் கொண்டு நிம்மதியாய் உட்கார்ந்து பழங்களை ஆவலுடன் தின்ருன்.

திடீரென்று அருகில் மரம் முறியும் சப்தம் கேட்டது. உடனே, வேலன் பயந்து மரத்தின்மேல் 'சரசர'வென்று ஏறி நன்ருய் உட்கார்ந்துகொண்டான். சலசலவென்ற சப்தம் முன்னைவிட அதிகமாகக் கேட்டது. சுற்று முற்றும் பார்த்தான். முதலில் ஒன்றும்புலப்படவில்லை. பின்னர், சிறிது தூரத்தில் ஒரு பெரிய யானை வருவது தெரிந்தது.

வேலனுக்கு யானை என்ருல் பிரியம் அதிகம். தன் ஊரில் திருவிழாக் காலத்தில் யானை வரும். யானைப் பாகனிடம் ஓரணுக் கொடுத்து யானைமீது ஐந்து நிமிஷம் பவனி வருவான். அதையெல்லாம் வேலன் இப்பொழுது நினைத்துக்கொண்டான். அதுவுமல்லாமல் யானைக்கு ஞாபக சக்தி அதிகம். ஒருவர் செய்யும் உபகாரத்தை அது ஒரு போதும் மறக்காது என்று சொல்லக் கேட்டிருக்கிருன்.

யானையும் ஆடி அசைந்து கொண்டு வேலன் இருந்த மரத்தண்டை வந்தது. மரத்திலிருந்த வேலனைப் பார்த்து என்ன நினைத்துக்கொண்டதோ தெரியவில்லை. தன் துதிக்கையை வேலனிடம் நீட்டி நீட்டி மடக்கிற்று. மெதுவாக வேலன் அந்த மரத்தின் தழைகளை ஒடித்து, அதன் துதிக்கையில் வைத்தான். அதுவும் அதைத் தின்றுவிட்டு மறுபடியும் துதிக்கையை நீட்டிற்று. தன்னிடமிருந்த பழங்களை அதற்குக்கொடுத்தான். அதையும் வாங்கிச் சாப்பிட்டது. இப்போது கொஞ்சம் பயம் நீங்கி விட்டது, வேலனுக்கு.

சிறிது சிறிதாகப் பொழுது சாய்ந்து இருள் எங்கும் சூழ்ந்து விட்டது. வேலனுக்குப் பயம் அதிகரிக்கத் தொடங்கிற்று. "கீழே இறங்கினல், இன்னும் என்னென்ன மிருகங்கள் வருமோ! நம் கதி அதோகதி தான்! என்னவானுலும் சரி!" என்று மரத்தின்மேலே இருந்து விட்டான்.

யானையும் சுற்றிச் சுற்றித் திரிந்துவிட்டு வேலன் இருந்த மரத்தடிக்கே வந்து சேர்ந்தது.

நேரம் போகப்போக நிலவு வெளிச்சம் நன்ருகத் தெரிந்தது. பார்த்தான், வேலன். கீழேயிருப்பது யானை! வேலன் மரத்திலிருந்தவாறே எழுந்து நின்று சுற்றுமுற்றும்பார்த்தான். தூரத்தில் ஒரு மலைதான் கண்ணுக்குத் தென்பட்டது. எங்கேயாவது வெளிச்சம் இருக்கிறதா என்று பார்த்தான். அதுதான் ஊருக்கே ஒதுப்புறமான காடாயிற்றே! ஊருக்கும் காட்டிற்கும் எவ்வளவு தூரமோ?

வேலன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும்போது சிறிது தூரத்தில் ஒரு புலி போவதைக் கண்டான். மனம் திக்திக் என்று அடித்துக்கொண்டது. ஒரு வேளை மரத்தின் கீழேயிருக்கும் யானை மரத்தை முறித்து விடுமோ என்ற பயம் வேறு. அன்றிரவு முழுவதும் வேலன் பயத்தினல் இமையோடு இமை ஒட்ட முடியவில்லை.

மெதுவாகப் பொழுது

விடிந்து கொண்டே வந்தது. வேலனுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. மரத்தடியில் யானையும் இல்லை. வேலன் மரத்தைவிட்டு மெதுவாகக் கீழே இறங்கினான். சாப்பிடுவதற்கு அங்கிருக்கும் பழங்களைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. அதையும் விட்டால் வேறு கதி கிடையாது. ஆகையால், பழங்களைப் பறித்துக்கொண்டு வரலாமென்று உண்டிவில்லுடன் கிளம்பினான்.

வேலன், கால்போன திசையில் போய்க் கொண்டிருந்தான். அவனுக்கு என்ன செய்வதென்றே புலப்படவில்லை. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. அப்போது, அவனுடைய உண்டிவில்தான் பசிபோக்கும் அட்சய பாத்திரமாக அவனுக்கு உதவியது. முன்பு செய்தது போலவே உண்டி வில்லால் பழங்களை அடித்தான். அவைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து சாப்பிட்டான்.

அப்போது வெகு தூரத்தில் யானை வருவதைக் கண்டான். தான் முன்பு ஏறியிருந்த மரத்திற்கே ஓடிவந்து ஏறிக்கொண்டான். யானையும் மரத்தண்டை வந்தது. வந்ததும் தன் துதிக்கையை உயரத் தூக்கிற்று. வேலனும் தன்னிடத்திலுள்ள பழங்களைக் கொடுத்தான்.

அன்றிலிருந்து வேலனுக்கு யானையிடமிருந்த பயம் நீங்கிற்று. நாளடைவில் இருவரும் நண்பர்களாகிவிட்டார்கள். தினந்தோறும் வேலனைத் தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு யானை சிறிது தூரம் வரைக்கும் வேடிக்கையாகச் சுற்றிவரும். அவனைக் கீழே நிற்கவிடாது. அதற்கு அச்சிறுவனின்மீது அவ்வளவு பிரியம்!

ஒரு சமயம் வேலனும் யானையும் ஒன்றாய்த் திரிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வேலனுக்குத் தாகமெடுத்தது. தண்ணீர் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றான். உட்கார்ந்து இரண்டுவாய் தண்ணீர் அள்ளிக் குடித்தான். எங்கோ தூரத்தில் வேட்டுச் சப்தம் கேட்டது. வேலன் திடுக்கிட்டான். பக்கத்திலிருந்த யானை ஒருவித சப்தமிட்டது. தன் துதிக்கையை நீட்டித் தன் மீது ஏறிக்கொள்ளும்படி சைகை செய்தது. வேலனும் உடனே ஏறிக் கொண்டான். யானை எடுத்தது ஓட்டம், மரத்தடிக்கு. அப்படியே கவிழ்ந்து படுத்துக்கொண்டு யானையின்



மாமா:—சீனு, நீ பெரியவனானதும் எப்படியிருக்கவேண்டும் என்று ஆசைப் படுகிறாய்?

சீனு:—உயரமாக.

—கே. மனோஹரன், புதுச்சேரி

காதுகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான், வேலன்.

மரத்தண்டை வந்து சேர்ந்து விட்டார்கள். யானை மண்டியிட்டு உட்கார்ந்தது. வேலன் சற்றும் தாமதியாமல் யானையை விட்டிறங்கி மரத்தின்மேல் ஏறிக் கொண்டான். யானை ஓட்டமாய் ஓடி எங்கோ மறைந்துவிட்டது.

இரண்டு வாரங்கள் கழிந்தன.

ஒரு நாள் மாலை, வேலன் யானையுடன் மலைக்குக் கிளம்பினான். மலைமேல் இஷ்டப்படி சுற்றிப் பார்க்கலாம் என்ற ஆவல் அவனைத் தூண்டியது. மலைக்குப் போய்ச்சேர இன்னும் கொஞ்ச தூரம்தான் இருந்தது. அப்பொழுது காடேகிடுகிடுக்கும் படியான ஒரு கர்ஜனைகேட்டது! அது சிங்கத்தினுடையது என்று வேலன் தெரிந்து கொண்டான். அவன் யானை மேல் உட்கார்ந்திருந்ததனால் தூரத்தில் வரும் சிங்கத்தைக் கண்டுவிட்டான். பதறிப் போனான். பக்கத்திலோ மரம் எதுவும் கிடையாது! "நாம் தப்ப முடியாது. இன்று சிங்கத்திற்கு இரையாகவேண்டியதுதான்!" என்று முடிவுகட்டி விட்டான்.

பாவம்! வேலனுக்கு அந்தச் சமயத்தில், யானையையும் தன் உண்டி வில்லையும் தவிர ஒரு ஈ காக்கைகூட உதவிக்குக் கிடையாது. யானை நிற்கவும் இல்லை; நிதானிக்கவுமில்லை; ஓட்டமாய் மலைப்பக்கம்ஓடியது. ஓடும் யானையைக்கண்ட சிங்கத்திற்கு அளவிலாக் கோபம் உண்டாயிற்று. மற்றொரு கர்ஜனை! காடே அதிர்ந்தது; சிங்கம் யானையைத் துரத்திக்கொண்டு பாய்ந்து வந்தது.

இதை அறிந்துகொண்ட யானை ஓட்டமாய் ஓடி மலையண்டை வந்தது. சிங்கமும் நெருங்கிற்று. யானை, தன் முதுகின் மேல் தூக்கிக் கொண்டு வந்த வேலனைத் தனது துதிக்கையால் அப்படியே அலாக்காகத் தூக்கி மலைமேல் வைத்து விட்டது. வேலனும் சற்றும் தாமதியாமல் மலைமேல் சிறிது தூரம் ஏறிச்சென்று, ஒரு கல்லின் பின்னால் மறைந்து உட்கார்ந்து கொண்டான்.

வேகமாய் ஓடிவந்த சிங்கம் யானைமேல் பாய்ந்தது. இரண்டுக்கும் யுத்தம் மூண்டது. ஒரே பயங்கர சப்தம் காடெங்கும் எதிரொலித்தது! சிங்கம் தன் முன்னங் கால்களால் யானையை அறைந்தது. யானை மட்டும் என்ன, சும்மா விடுமா! தன் துதிக்கையால் எதிரியின் கழுத்தைப் பிடித்து வளைத்தது. இத்தனை பாடும் வேலனுக்காகவே! சிங்கத்திற்கும் யானைக்கும் விடாப்போர் நடந்தது. இந்த ரோஷமான சண்டையில் தன் உயிர்த்தோழனை யானை என்ன கதியாயிற்றோ என்று வேலன் எழுந்து பார்த்தான். சிங்கம் வாயைப்பிளந்து கர்ஜித்தது. இதைக்கண்ட யானை துதிக்கையால் சிங்கத்தின் மண்டையில் ஓங்கி இரண்டடி அடித்தது. சிங்கம் மற்றொரு முறை வாயைப் பிளந்தது.

வேலனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டுவந்தது.எடுத்தான், தன்கைத்துப்பாக்கியான உண்டி வில்லை; ரவையான கல்லைப் பொருத்தினான்; குறி பார்த்து விட்டான். வேலன் வைத்த குறி தவறுமா? கல்லானது

நேராக சிங்கத்தின் திறந்திருந்த தொண்டையில் போய் விழுந்தது. இப்படியே பல கற்களை 'மட, மட'வென்று அடித்தான். அவைகளில் சில சிங்கத்தின் தொண்டையிலே போய் விழுந்தன. அவ்வளவுதான்! சிங்கத்துக்குத் தொண்டை அடைத்து விட்டது. கோபம் அதிகரித்தது. கால் நகங்களால் யானையைப் பிராண்டிற்று. வேலன் 'உனக்கென்ன அவ்வளவு அகம்பாவம்?' என்று இன்னொரு கல்லை எடுத்து சிங்கத்தின் கண்ணுக்குக் குறி பார்த்து விட்டான். கல் 'சர்' என்று சிங்கத்தின் கண்ணில் போய்ப் பாய்ந்தது. பீறிட்டது, இரத்தம்! சிங்கத்திற்கு வலி அதிகரிக்கவே பாதி பலம் ஒடுங்கிச் சோர்ந்துவிட்டது. யானை தன் இஷ்டத்திற்குக் கால்களாலும், துதிக்கையாலும் சிங்கத்தை ஆத்திரம் தீர மிதித்துத்துவைத்தது. சிங்கம் இரத்தத்தில் மூழ்கி விட்டது. தன் உடம்பெல்லாம் காயமும் இரத்தப் பெருக்குமாய் இருந்ததை யானை லட்சியம் செய்யவில்லை. இறுதியில் யானை வெற்றியடைந்தது! சிங்கம் உயிரை விட்டது!

யானைக்குச் சொல்ல முடியாத சந்தோஷம். இதையெல்லாம் கண்ணுற்ற வேலன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான். யானை தனக்குச் செய்த உதவியையும், தனக்காகப் பட்ட உடல் கஷ்டத்தையும் கண்டான். சிங்கம் இறந்து விட்டதைப் பார்த்ததும் மலையைவிட்டுக் கீழே இறங்கினான். கீழே ஒரே இரத்தமயம். யானைக்கு வேலனைக் கண்டதும் ஒரே ஆனந்தம். "நாம் யுத்தத்தில் வெற்றிபெற்று விட்டோம். வா, போகலாம்" என்பது போல் சந்தோஷத்தால் வேலன் இருந்த பக்கம் துதிக்கையை ஆட்டிக்கொண்டே நீட்டிற்று. வேலனும் யானைமேல் ஏறிக்கொண்டான். அந்தநேரத்தில் அக்காட்டில் தாங்கள் இருவர்தான் பெரிய வெற்றி வீரர்கள் என்பதைப்போல் யானை நினைத்துக் கொண்டு கம்பீரமாக நடந்தது. நடந்து கொஞ்ச தூரம் சென்றது.

திடீரென்று யானை ஒரு பள்ளத்தில் விழுந்தது. கூடவே வேலனும் விழுந்தான். அங்கேயிருந்த ஒரு யானை பிடிக்கும் குழியில்தான் அவர்கள் விழுந்தார்கள். அது தழைகளால் மூடியிருக்கவே வேலனும் கவனிக்கவில்லை. பாவம்! சந்தோஷத்தால் ஆடித் திரிந்தவர்கள் பள்ளத்தில் மாட்டிக் கொண்டார்கள்! முன்பொரு நாள் வேட்டுச் சப்தம் கேட்டு யானை ஓடி வந்ததல்லவா? அன்று வந்தவர்கள் யானை பிடிப்பதற்காகச் செய்த சூழ்ச்சிதான் இது. யானை விழுந்த சப்தம் கேட்டு மறைவாக ஒளிந்திருந்த ஆட்கள் ஓடி வந்தார்கள். பள்ளத்தில் வேலனும் விழுந்து கிடந்தான். உடனே பையனைத் தூக்கினார்கள். யானைக்காலில் சங்கிலியை மாட்டி வெளியில் எடுத்தார்கள்.

இப்பொழுது யானையின் முகம் துக்கத்தால் கவிழ்ந்திருந்தது. ஏனென்றால் "நாம் மனிதர்களிடம் சிக்கிக்கொண்டோம். இனி அவர்கள் இஷ்டப்படி நடக்கவேண்டும். காட்டில் ஓடியாடித் திரிவதைப்போல் அங்கு இருக்க முடியாது. உயிரையும்

லட்சியம் செய்யாமல் சிங்கத்துடன் போராடிக் காத்த சிறுவனையும் இனி நம்மிடமிருந்து பிரித்து விடுவார்களே!'' என்று யானை வருந்தியது. "இனி ஒன்றையும் நாம் நினைப்பதில் பிரயோசனமில்லை'' என்று அவர்களைப்பின் தொடர்ந்தது.

வேலன் யானையின் பக்கவாட்டிலே அதை அன்புடன் தட்டிக்கொடுத்துக் கொண்டே சென்றான். வேலன் மனமோ "இனி நமக்குப் பயமில்லை. நம் இனத்தார்கள் வாழுமிடத்தை அடையப்போகிறோம் என்ற எண்ணம்; மனம் சந்தோஷத்தால் துள்ளியது. எந்த ஊருக்கு அவர்கள் அழைத்துக்கொண்டு போனாலும், நான் என் அப்பா இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு விடுவேன்'' என்றெல்லாம் எண்ண மிட்டான்.

அவர்கள் வேலனைப்பார்த்து, "தம்பி! உன் பெயர் என்ன? நீ எப்படி இந்தக் காட்டிற்கு வந்தாய்? உன் சொந்த இருப்பிடம் எது?'' என்றெல்லாம் விசாரித்தார்கள். வேலனும், தான் குடிசையைவிட்டுக் கிளம்பியதிலிருந்து, காட்டில் இதுவரையில் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னான். அவன் சொல்லியதைக்கேட்ட அவர்களுக்கு ஆச்சரியமும், சந்தோஷமும், பரிதாபமும் உண்டாயின. அவர்கள் வேலனைப் பார்த்து, "தம்பி, அப்படியா சங்கதி! ஒரு விதத்தில் அது எங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஏனென்றால், யானை உன்னிடத்தில் நன்றாகப் பழகியும், விசுவாசமாயும் இருக்கிறது. நீயும் அதனுடன் நன்றாகப் பழகியிருக்கிறாய். உயிரையும், உடலையும் லட்சியம்செய்யாது உன்னைக் காப்பாற்றிய இந்த யானையை நீ ஒரு நாளும் மறக்கக்கூடாது. நாங்கள் 'சர்க்கஸ்' நடத்தும் கூட்டாளிகள். இந்த யானையை அதற்காகத்தான் பிடித்தோம். நீயும் எங்களுடனே இருந்துவிடு. தற்போது உனக்கும், இந்த யானைக்கும் தாய்க்கும், சேய்க்கும் உள்ள அன்பு இருக்கிறது. ஆதலால் இந்த யானையுடனே நீ பல ஆச்சரியமான வேடிக்கைகளைச் செய்து ஜனங்களை உற்சாகப்படுத்த முடியும். என்ன சொல்கிறாய்?'' என்று வாஞ்சையுடன் வேலனைக் கேட்டார்கள்.

வேலனும் "சரி'' என்று ஒப்புக்கொண்டான்.

வேலன் சர்க்கஸில் சேர்ந்ததும் சர்க்கஸுக்கு நல்ல பேரும் புகழும் கிடைத்தன. காரணம், வேலனும் அவன் நண்பன் யானையும் அபூர்வமான, அபாயகரமான, ஆச்சரியமான விளையாட்டுக்கள் பல செய்து காண்பித்தனர். மானேஜரும் வேலனிடமும் அவன் நண்பன் யானையிடமும், அளவிலா அன்பு காட்டினர். யானைக்கு 'பாபு' என்ற பெயரையும் சூட்டினர். வேலன் எப்பொழுதும் தன் பாகம் முடிந்ததும் தனக்கென்று விடப்பெற்ற விடுதிக்குச் சென்று விடுவான்.

ஒரு நாள் காலை, முதலாளி வேலனை அழைத்துக்கொண்டு மிருகங்கள் இருக்குமிடத்தைப் பார்வையிடச் சென்றார். இருவரும் வரிசையாக மிருகங்களைப் பார்த்துக்கொண்டே வந்தார்கள்.

கூண்டில் சிங்கம் இருப்பதைப்

பார்த்தான் வேலன். உடனே அங்கேயே நின்று விட்டான். முதலாளியோ பேசாமல் போய்க் கொண்டேயிருந்தார். வேலன் நின்று விட்டதைக் கவனிக்க வில்லை. வேலனுக்குக் காட்டில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் திரைப்படக்காட்சிபோல் மனத் தில் தோன்றலாயின.

அதே சமயத்தில் முதலாளி யின் அதட்டும் சப்தம் கேட் டது. "ஏய்! இதென்ன ஒரே அசுத்தமா யிருக்கிறதே! பார்த் துச் சரியாகச் சுத்தப் படுத்து," என்று அதட்டிக்கொண் டிருந்தார்.

அதட்டும் சப்தத்தைக்கேட்ட வேலன், தான் நின்ற இடத்தை விட்டு முதலாளி இருந்த பக்கம் வந்தான். அங்கே பார்த்தான். கூண்டுக்குள் கிடந்த அசுத்தங் களை எடுத்துச் சுத்தம் செய்து கொண்டிருந்தான் ஒருவன். அவனைப் பார்த்த வேலனுக்குப் பரிதாபமாயிருந்தது. அருகில் சென்ருன். தன் சட்டைப் பையிலிருந்த நாலணு நாண யத்தை எடுத்து "இந்தாப்பா" என்ருன். அந்த வேலையாள் பயத்துடன் நிமிர்ந்தான். வேலனைப் பார்த்ததும் அவன் முகம் யோசனையிலாழ்ந்தது.

ஆனல் வேலனே "அப்பா!" என்று அவனைச் சேர்த்துக் கட் டிக் கொண்டு விக்கி விக்கி அழுதான். அவனுடைய சந்தே கமும் தீர்ந்தது. "என் கண்ணு வேலனு!" என்று வேலனின் முகத்தைநிமிர்த்திப்பார்த்தான்.

வேலன் தன்னைச்சமாளித்துக் கொண்டு "அப்பா! நீங்களா இந்த வேலை செய்கிறீர்கள்! வேண்டவே வேண்டாமப்பா. பிள்ளையாகிய நான் உயிருடன் இருக்கும்போது என் கண் முன் ஞல் நீங்கள் இப்படியா இருப் பது! இனி நீங்கள் ஓய்வுடன் வீட்டில் இருக்க வேண்டியது தான். உங்களுக்குப் பாடுபட்டு உழைத்துக் காப்பாற்றும் பொறுப்பு என்னுடையதே" என்று தகப்பனின் காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

இவர்கள் பேச்சைக் கேட்டு முதலாளியின் மனம் மிகவும் கஷ்டப்பட்டது. அனுதை என்று கூறி அவன் தம்மிடம் வேலைக்கு வந்ததிலிருந்து வேல னுக்கு எல்லாவற்றையும் விளக் கிச் சொன்னுர் மானேஜர். அத் துடன் அவனை இவ்வளவு நாளும் யாரென்று தெரிந்து கொள்ளாமல் மிரட்டினதற்காக வேலனிடம் மன்னிப்புக் கோரினுர்.

வேலனுக்கோ தன் அப்பா வைச் சந்தித்து விட்டோம் என்ற ஆனந்தம்; அவன் அப்பா வுக்கோ மகனைக் கண்டுபிடித்து விட்டோம் என்ற களிப்பு. 'சர்க்கஸ்' முதலாளிக்கோ அப் பாவையும் மகனையும் ஒன்று சேர்த்து விட்டோம் என்ற மகிழ்ச்சி.

பிறகு, மூவரும் ஒருமுகமாக நடக்கலானுர்கள். எங்கே? வேலனின் நண்பனுன யானை யைப் பார்க்கத்தான்!

★

திட்டப்படி நிர்மாணம் செய்தலே
முன்னேற்றத்துக்கு வழி

★

உங்களுக்குத் தேவையான லைட்டுகளையும்
மற்ற எலக்ட்ரிக் சாமான்களையும்
நாங்கள் சப்ளை செய்கிறோம்.

★

ஒரு முறை பரீக்ஷித்தால்
பூரண திருப்தி அடைவீர்கள்

★

விபரங்களுக்கு :

லக்ஷ்மி என்ஜினீயரிங் & டிரேடிங் கம்பெனி

எலக்ட்ரிகல் என்ஜினீயர்ஸ்

5/8, பிராட்வே :: மதராஸ்-1

புலியைக் கொன்றவன்

'யுதிஷ்டிரன்'

ஒரு நாள், மகத நாட்டு அரசன் வேட்டையாடத் தன் சேனையுடன் பக்கத்திலுள்ள காட்டிற்குச் சென்றான்.

அரசன், தன் சேனையுடன் நீண்ட நேரம் வேட்டையாடிக் கொண்டிருந்தான். அது சமயம் அப்பக்கம் ஒரு மான் எதிர்ப்பட்டது. அதைக் கண்ட அரசன் அம் மானைத் துரத்திக் கொண்டு தன் சேனையை விட்டு வெகு தூரம் சென்று விட்டான். கடைசியில் அம் மானும் அரசன் கையில் சிக்காமல் ஓடி மறைந்து விட்டது. அரசனும் மிக்கக் களைப்படைந்து ஒரு மரத்தின்கீழ் படுத்து இளைப்பாறினான். இளைப்பாறியவன் அப்படியே நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டான்.

அச்சமயம், ஒரு புலி அரசன் தூங்கிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தது. அது, அரசன்மீது பாய்ந்து அவனைக் கொல்லப் போகும் சமயம், அப்போது, அப்பக்கம் சென்ற வேடன் ஒருவன் இதனைக் கண்டு விட்டான். உடனே, தூங்கும் அரசனைக் காப்பாற்ற அப்புலியைக் குறிபார்த்து அம்பெய்தான். அம்பு நன்றாகப் பாய்ந்து விட்டதால், புலி கோர சப்தத்துடன் கூச்சலிட்டு அங்கேயே விழுந்து இறந்தது. சப்தத்தைக் கேட்ட அரசன் திடுக்கிட்டு எழுந்து சுற்று முற்றும் பார்த்தான். தன் எதிரில் வேடன் ஒருவன் நிற்பதையும், தன் பக்கததில் புலி ஒன்று இறந்து கிடப்பதையும் கண்டான்;

வேடனால், தன் உயிர் காப்பாற்றப் பட்டதை உணர்ந்தான். உடனே, மிக்க மகிழ்ச்சியுடன் அவனைத் தன்னுடன் நகருக்கு அழைத்துக் கொண்டு போனான். தன்னைக் காப்பாற்றியதற்கு வெகுமதியாய், தனக்குக் கீழ் ஒரு சிற்றரசனாக அந்த வேடனை நியமித்தான். சின்னூர் என்ற சிறு நகரத்தை அவன் அரசாளும்படி செய்தான்.

சின்னூருக்கு அவ்வேடன் சிற்றரசனானதும் மக்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் நேர்மையுடனும், நீதியுடனும் ஆண்டு வந்தான். மேலும், அவன் தினந்தோறும் நகர் வலம் வருவான். அப்போது மக்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வான். அப்படி அவன் நகர் வலம் வரும்போது முன்னால் ஒரு குதிரை செல்லும். அதன் முதுகில் ஒரு பெட்டி இருக்கும். அதன் பின்னால்தான் அவன் செல்வான்.

அவனுடைய ஆட்சியின் மேன்மையையும், புகழையும் கேள்விப்பட்ட மற்ற சிற்றரசர்கள் அவன் மீது பொறாமை கொண்டு மகத நாட்டு அரசனிடம் புகார் செய்தனர். அதாவது அவ்வேடன் எங்கே சென்றாலும் குதிரை மீது ஒரு பெட்டியை வைத்துக் கொண்டு போவதாகவும், அதில் நிறைய நகைகளும், விலையுயர்ந்த கற்களுமிருப்பதாகவும் வேடன் தன் சொந்தக்காரர்களுக்கு அவைகளை அனுப்பி விடுவதாகவும் கூறினர்.

இதனைக் கேட்டு ஒன்றும் அறியாத மகத நாட்டு அரசன் அவ்வேடன்மீது மிகவும் கோபம் கொண்டான். கையும், களவுமாக அவனைப் பிடிக்க வேண்டுமென்று தன் மந்திரியுடன் சின்னூருக்குப் புறப்பட்டான்.

அரசன், தன் நகருக்கு வருவதைக் கேள்விப்பட்ட அந்த வேட அரசன் அவனை வரவேற்க எப்போதும் போல் குதிரையின் முதுகில் ஒரு பெட்டியைக் கட்டி முன்னால் அனுப்பினான். பின்னால், அவன நடந்துசென்று சகலவித மரியாதைகளோடும் அரசனை வரவேற்றான். அரசன் மிகவும் கோபங்கொண்டு இரண்டு சேவகர்களை அழைத்து அப்பெட்டியை அவிழ்த்துக் கொண்டுவரச் சொன்னான். அரசன் உத்தரவுப்படி சேவகர்கள் அப்பெட்டியை அவிழ்த்துக் கொண்டுவந்து அரசன் முன் வைத்தனர்.

உடனே, அரசன் அப்பெட்டியை மிகவும் பதற்றத்துடன் திறந்தான். திறந்ததும் ஒரே வியப்பும், ஆச்சரியமும் அடைந்தான். ஆனால், கேள்விப்பட்ட பொருள்கள் ஒன்றும் அதில் இல்லை. அதற்குப் பதில் அம்பு, வில், பழைய கிழிந்த ஆடை முதலியவைகளே இருந்தன. இதனைக்கண்ட மகத அரசன் அவ்வேடனை நோக்கி, "ஏன் நீ இவைகளை எல்லாம் பெட்டியில் போட்டு முன்னால் கொண்டு செல்லுகிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவ்வேடன் மிக்கப்பணிவுடன், அரசனை நோக்கி, "அரசே! நான் வேடனாக இருந்து சிற்றரசனாக மாறி இருக்கிறேன். ஆதலால், என் மனம் கர்வம்கொண்டு மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யாமல் போய்விட்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். ஆகையால்தான் இப்படிச் செய்தேன். நான் முன்பிருந்த நிலையை எனக்கு இந்தப் பெட்டி அடிக்கடி நினைப்பூட்டுகிறது; சிற்றரசன் என்கிற கர்வம் தலைக்கேறாமல் பார்த்துக் கொள்கிறது; நானும், மக்களில் ஒருவன் என்பதை மறக்காமல் இருக்கச் செய்கிறது" என்று கூறினான்.

இதைக் கேட்ட மகத அரசன் வேடனின் உயர்ந்த குணத்தை மெச்சி, அவனுக்கு மேலும் சில நகரங்களைக் கொடுத்து அரசாளும்படி கூறினான். வேடனுடைய ஆட்சியின் மேன்மையைக் கேட்டு மற்ற சிற்றரசர்களும் வேடனைப் போலவே மக்களின் நலன்களைக் கவனித்து அரசாள வேண்டும் என்ற பாடத்தைப் படித்துக் கொண்டார்கள். அதைச் செய்கையிலும் காட்ட முயன்றார்கள்.

தண்டனை

ஆர். தங்கவேலன்

ஸ்காட்லாந்து நாட்டின் கிழக்குக் கடற்கரையில் ஒரு மலை இருந்தது. அதன் பெயர் 'இன்ச்கேப்' மலை.

கடலில் புயல் வீசும்போது அந்த மலையின் அருகில் வரும் கப்பல்கள் மலையின்மீது மோதி சுக்கு நூறாகி விடும். அதிலிருக்கும் செம்படவர்களின் உயிர்கள் அவர்களுடைய உடல்களை விட்டுப் பிரிந்து விடும். அமாவாசை நாட்களில்—நல்ல இரவு நேரங்களில் இவ்வித அபாயங்கள் அடிக்கடி நேர்ந்துகொண்டே இருக்கும். மீன் பிடிப்போர், படகோட்டிகள் முதலியவர்களின் உடல்கள் கடலில் மிதந்துகொண்டே இருக்கும்.

மலைக்கு அருகே இருந்த ஒரு பிரதேசத்தில் ஒரு யோகி வசித்து வந்தார். கூத்தாடிக் காசு பறிக்கும் போலிச் சாமியாரல்ல, அவர்! உயிர்களிடத்தில் உண்மை அருள் உடையவர்.

ஏழைச் செம்படவர்களின் அந்நிலை அவர் மனத்தை வாட்டி வதைத்தது; உறக்கத்தை மறக்கச் செய்தது. "இதற்கு ஒரு வழி காண வேண்டும். கண்டு கணக்கற்ற உயிர்களும், பொருள்களும் சேதமுறுவதைக் காப்பாற்ற வேண்டும். இது நம் கடமை" என்று அவர் உணர்ந்தார். அதைப் பற்றிச் சிந்திப்பதிலேயே—கடமையை நிறைவேற்றுவதிலேயே காலத்தைச் செலவழித்தார்.

அவருடைய நல்லெண்ணத்திற்குப் பலன் கிடைக்கத்தான் செய்தது. எப்படி? தம் தோழர்களை அழைத்தார்; தம் யோசனையைக் கூறினார். நண்பர்கள் மகிழ்ந்தனர்: யோகியைப் போற்றினர்.

அவர் ஒரு பெரிய மணியை எடுத்தார். பழைய தமிழ் நாட்டு அரசர்களின் காலத்தில் இருந்த ஆராய்ச்சி மணியின் அளவு என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன். ஒரு நீண்ட கயிற்றினால் அந்த மணியை இன்ச்கேப் மலையின் உச்சியில் கட்டினார்.

கடலில் புயல் கொந்தளிக்கும்போது காற்று அந்த மணியைத் தாக்கும். உடனே ஓசை எழும்பும். படகோட்டிகள் மணியின் ஓசையைக் கேட்டு மலையின் இருப்பிடத்தை அறிவார்கள். படகுகளை வேறு திசையில் ஒதுக்கி விடுவார்கள். இதனால் அவர்களுடைய உயிர்களும், பொருள்களும் பாதுகாக்கப்பட்டன. படகோட்டிகள் வாயார, மனமார, யோகியைப் போற்றினார்கள்; புகழ்ந்தார்கள்.

* * *

ரால்ப் என்னும் கடல் கொள்ளைக்காரன் அந்தப் பக்கத்தில் வசித்து வந்தான். அவன், கப்பலில் ஏறித் தன் தோழர்களுடன் செல்வான். படகோட்டிகளையும், ஏழைச் செம்படவர்களையும் கொள்ளையடிப்பான்; கொலை செய்வான்.

இன்ச்கேப் மலை முன்புசெய்த வேலையை ரால்ப்பின் தோழர்கள் செய்தனர்!

யோகியை எல்லோரும் புகழ்வது அவனுக்கு வெறுப்பை ஊட்டியது. யோகியின் புகழை மங்கச் செய்யச் சரியான சமயம் எதிர்பார்த்தான்.

ஒரு நாள், ரால்ப்பின் கப்பல் இன்ச்கேப் மலையின் ஓரத்தில் சென்றுகொண்டிருந்தது. அமைதியான



கடலிலே—பிரகாசமான சூரிய ஒளியிலே ரால்ப், கப்பலின் மேல் தளத்தில் 'சீட்டி'யடித்துப் பாடி உலாவிக் கொண்டிருந்தான். அவனுடைய கூரிய கண்கள் மலையிலுள்ள மணியைக் கண்டு விட்டன. உடனே, அவன் முகம் சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்தது. யோகியின் புகழை மடியச்செய்ய அவனுக்கு அருமையான ஒரு யோசனை தோன்றியது!

தன் யோசனையைத் தோழர்களிடம் கூறி, அவர்கள் அபிப்பிராயத்தைக் கேட்டான்.

"மலையிலிருக்கும் மணியை அறுத்தெறிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்று ரால்ப் கேட்டான்.

"ஹா—ஹா—ஹா! நாம் இதை அவசியம் செய்யத்தான் வேண்டும். அற்புதமான விளையாட்டு! படகோட்டிகளின் மகிழ்ச்சியை இனிப் பார்ப்போம். யோகியை அவர்கள் வாயால்கூடப் புகழ மாட்டார்கள். அதற்கு இதுதான் அருமையான சந்தர்ப்பம்" என்று ஆனந்தத்துடன் குதித்தார்கள், ரால்ப்பின் சிகாமணிகள்.

பிறகு ஒரு படகின் உதவியால் இன்ச்கேப் மலையை அடைந்தனர். ரால்ப் மலையின் உச்சிக்குத் தாவி, கயிற்றை அறுத்து எறிந்தான். பிரம்மாண்டமான சப்தத்தோடு மணி, கடலின் அடித்தளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

ரால்ப்பும், அவன் தோழர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "முட்டாள் முனிவரை இனி யார் புகழ முடியும்?" என்று சொல்லிச் சொல்லிச் சிரித்தார்கள். ஆனால், அந்த அற்பர்களின் உயிருக்கே அவர்களுடைய விளையாட்டு உலைவைக்கப் போகிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தால் அப்படிச் சிரித்திருப்பார்களா?

பிறகு, கப்பலில் ஏறி வெகு தூரம் சென்று விட்டார்கள்.

* * *

அன்று ஒரு நாள். ரால்ப்பும் அவன் தோழர்களும் வழக்கம்போல் படகுகளைத் தாக்கிப் படகோட்டிகளைக் கொன்று கடலில் வீசி எறிந்து விட்டு, அவர்களிடமிருந்த பொருள்களைச் சூறையாடிக்கொண்டு ஸ்காட்லாந்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

இரவு நேரம். சந்திரன் வெளியே தலைகாட்டவில்லை; இந்தக் கொடியர்களைப் பழி வாங்கத்தானோ என்னவோ? நட்சத்திரங்கள்கூட ஒளியிழந்து, ஆகாயப் படுக்கையில் மூட்டைப் பூச்சிகள் போல் அங்கொன்றும்—இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்தன. மேகப் படலங்கள் அந்த இரவைக் கும்மிருட்டாக்கிக் கொண்டிருந்தன.

ரால்ப்பிற்குத் தான் இருக்கும் இடமே தெரியவில்லை.

"நாம் கரைக்கு அருகில்தானா இருக்கிறோம்? நிலா எப்போது உதயமாகும்?" என்று ரால்ப் கொஞ்சம் நெஞ்சில் பீதியுடனே கேட்டான்.

"அதென்னவோ தெரியவில்லை" என்று ரால்ப்பின் தோழர்களில் ஒருவன் கூறினான்.

"ஐயோ! அலைகள் இன்ச்கேப் மலையில் மோதும் சப்தத்தைக் கேட்டீர்களா?" என்று அலறினான், மற்ெருருவன்.

"ஆ, அந்த யோகியின் மணி மட்டும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்று கதறினார்கள், மற்றவர்கள்.

ரால்ப் ஒன்றும் பேசவில்லை. தான் செய்த தவறு அவனுக்கு அப்போது தான் புலப்பட்டது. யோகியின் மணியினுடைய அவசியத்தை அவன் அப்போதுதான் உணர்ந்தான். அவனையறியாமலேயே அவன் மனது யோகியைப் போற்ற ஆரம்பித்தது. ஆனாலும், இப்போது என்ன செய்வது? அவனுடைய சொந்தக் கரங்களினால் வீசி எறியப்பட்ட மணி, அவன் நினைத்தவுடன் கடலின் அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுந்து வந்து விடுமா? மணிக்குத்தான் மன்னிக்கும் சக்தி இல்லையே!

கடல் கொந்தளித்தது; புயல் எழும்பியது; அலைகள் கரைபுரண்டு பாய்ந்தன. 'ஓ' என்ற பேயிரைச்சல் காதைச்செவிடாக்கியது.

மறுவினாடி ஒரு கோர சம்பவம்! ரால்ப்பின் கப்பல் இன்ச்கேப் மலை மீது மோதியது!

"ஆ, இன்ச்கேப்!"—ரால்ப்பும் அவன் தோழர்களும் கதறினார்கள்.

கப்பல் தூள்தூளாகியது. கடலில் மூழ்கத் தொடங்கியது!

"ஐயோ! என் முரட்டு புத்தியால் மோசம் போனேனே!" என்று பைத்தியம் பிடித்தவன் போல் ரால்ப் கத்தினான்;

'ஆயினும் அவனுடைய கதறலுக்குக் கடல் செவி சாய்க்க வில்லை!'

கப்பலின் எல்லாப் பாகங்களிலும் அலைகள் பாய்ந்தன. கப்பல் கடலில் கவிழ்ந்தது. சில வினாடிகளுக்கெல்லாம் ரால்ப்பும், அவன் தோழர்களும் உயிரற்ற பிணமாக நீரில் மிதந்தார்கள்.

எல்லோருக்கும் பயனளித்தது அந்த மணி. அதை ரால்ப் அறுத்துக் கடலில் எறிந்தான். தான் நன்மை செய்யா விட்டாலும் நன்மைசெய்த அந்த யோகியின்புகழை மங்கச் செய்ய ரால்ப் திட்டமிட்டான்.

திட்டம் இட்டவாறே ரால்ப் செய்து முடித்தான். ஆனால், அவனுக்குக் கிடைத்த தண்டனை........?

அருமையான புத்தகங்கள்

ராமுவும் நானும் —நா. கி. நாகராஜன்	ரூ. 1-0-0
குழந்தைக் குரல் —அழ. வள்ளியப்பா	,, 1-0-0
ராஜாமணி —பூவண்ணன்	,, 0-6-0
வண்ணாத்திப் பூச்சி —கல்யாணி	,, 0-6-0
வேட்டை நாய் —அழ. வள்ளியப்பா	(அச்சில்)

பூஞ்சோலை, த. பெ. எண் 1803, சென்னை-1



கழுகும்,

கருத்து : ஈசாப்

காட்டு வயலில் செம்மறி
ஆட்டு மந்தை ஒன்றுமே
கூட்ட மாகத் திரிந்து ;
குறைவில் லாமல் மேய்ந்தது.

வட்ட மிட்டு அவ்விடம்
வந்த கழுகு மந்தையில்
குட்டி ஆடு ஒன்றினைக்
கூர்ந்து பார்க்க லானது.

பார்த்துக் கொண்டே வேகமாய்ப்
பாய்ந்து அதனைக் கால்களால்
சேர்த்து நன்கு தூக்கியே
சிறக டித்துப் பறந்தது.

அருகில் இருந்த குன்றிலே
அமர்ந்தி ருந்த காகமும்
பறந்து சென்ற கழுகினைப்
பார்த்து நினைக்க லானது:

“கழுகு சிறிய ஆட்டினைக்
கவர்ந்து செல்லு கின்றது.
கொழுத்த பெரிய ஆட்டையே
கொண்டு நானும் செல்லுவேன்”

என்று எண்ணிக் காகமும்
எழுந்து பறந்து சென்றது.
நன்கு கொழுத்த ஆட்டினை
நாடி முதுகில் அமர்ந்தது.

முறுக்கி முறுக்கிக் கால்களால்
முதுகி லுள்ள மயிர்களை
இறுக்கிப் பிடித்துத் தூக்கவே
எத்த னங்கள் செய்தது.

காக்கையும்

பாடல்: அழ. வள்ளியப்பா

கனம் மிகுந்த ஆட்டினைக்
காகம் தூக்க முடியுமோ?
மனத்தி லிருந்த ஆசையும்
மாய்ந்து மடிந்து மறைந்தது.

ஆசை மறைந்த தாயினும்
ஐயோ, கால்கள் சிக்கின!
வீசிச் சிறகை அடித்தது;
வீண்தான்! தப்ப முடியுமோ?

மாட்டிக் கொண்டு தவித்திடும்
மடமை மிக்க காக்கையை
ஆட்டுக் காரன் பார்த்தனன்;
ஆவ லோடு நெருங்கினன்.

பறக்க வழியும் இன்றியே
பரித விக்கும் காக்கையை,
இறக்கை தன்னை வெட்டியே
எடுத்து வீடு சென்றனன்.

"அப்பா, இதுபோல் பறவையை
அடியேன் பார்த்த தில்லையே!
எப்போ தப்பா பிடித்தனை?
என்ன பறவை சொல்லுவாய்?"

என்று கேட்ட மகனிடம்
இடையன் கூற லாயினன்:
"அன்பு மிக்க மைந்தனே,
அதிச யம்போல் பார்ப்பதேன்?

கொழுத்த ஆட்டைத் தூக்கியே
கொண்டு செல்லும் ஆசையில்
கழுகு என்று தன்னையே
கருதிக் கெட்ட காக்கைதான்!"

எங்கள் குடும்பம்

'இளிச்சவாயன்'

★

என் அக்கா

"நடனம் ஆடினார்.........வெகு நாகரிகமாகவே......கனக சபையில் ஆ...னந்த நட....னம்....ஆ......டினார்"

ஓடாதீர்கள்! -என் அருமை அக்கா தான் இப்படிப் பாடியபடியே நடனம் ஆடிக் கொண்டிருக்கிறாள்.

அவள் நடனத்தை நீங்கள் பார்த்ததில்லையா! ஐயோ! ஐயோ! அதற்கு இரண்டு கண்கள் போதாது! அதிலும், 'காணக் கண் கோடி வேண்டும்' என்ற சாகித்தியத்திற்கு அவள் அபிநயம் பிடிக்கும்போது, 'ஆண்டவனே, இந்தக் கண்றாவியைப் பார்க்க ஏன் எனக்கு இரண்டு கண்களைப் படைத்தாய்? என்னைக் குருடனாகவே படைத்திருக்கக் கூடாதா?' என்ற எண்ணம்தான் எவருக்கும் தோன்றும்.

தெருவிலே தகர டப்பாவைத் தட்டிக் கொண்டே, "ஏ...அம்மாவே... அம்மாவே......அம்மாவே!" என்று தன் சொந்த சாகித்தியத்துடன் நடனம் ஆடுகிறாளே நரிக்குறத்தி, அவள் நடனமாவது ஒரு விதத்தில் நன்றாக இருக்கும். என் அக்காவின் நடனம் அதைவிட மோசம்!

நட்டுவனார் மாதம் பிறந்தால் ஐம்பது ரூபாய் சுளையாக வாங்கிக் கொண்டு போய்விடுகிறார். அவர் சம்பளம் வாங்கும் போதெல்லாம் என் அப்பாவிடம், "இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் பெண்ணுடைய நடனத்தை அரங்கேற்றம் செய்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுத்தான் போகிறார். அதைப்போல எத்தனையோ ஒரு மாதங்கள் ஓடி மறைந்து விட்டன. இன்னும் என் அக்கா பழைய, 'தில்லானா'விலேயே இருக்கிறாள். எப்பொழுது அதையெல்லாம் முடித்துக்கொண்டு புதிய நடனங்களான, 'ஜிப்ஸி டான்ஸோ', அல்லது 'கிப்ஸி டான்ஸோ' ஆடப் போகிறாளோ! ஆடி, ரஸிக சிகாமணிகளுக்குத் தலைவலியை உண்டாக்கப் போகிறாளோ! யார் அறிவார், பராபரமே!

என் அக்கா இருக்கிறாளே, அவள்

என் அம்மாவுடைய செல்லப் பெண். அவள்தான் முதல்குழந்தை. அதுவுமல்லாமல், பெண் குழந்தைகளிடம்தான் அம்மாக்களுக்கு ஆசை அதிகம் என்று சொல்வார்களே, அதற்கு என் அம்மா ஒரு சாட்சியாக இருக்கிறாள். என் அக்காவின் பேரில் அவளுக்கு உயிர்! எனவே என் அக்கா எது கேட்டாலும் உடனே வந்துவிடும்!

அக்கா முதலில் நடனம் கற்றுக் கொள்ளப்போகிறேன் என்று அம்மாவிடம் பேச்சை ஆரம்பித்தபோது அம்மா எவ்வளவு தூரம் எகிறிக் குதித்தாள் தெரியுமா? (எகிறிக் குதித்தாள் என்றால், 'லாங் ஜம்ப்' என்று நினைத்து விடாதீர்கள்! இதெல்லாம் சும்மா கட்டுரைக்காக எழுதுவது!)

"என்னடி இது! குடும்பப் பெண்ணு, லட்சணமா? ஒரு கும்மி, கோலாட்டம் இவைகளைக் கற்றுக் கொள்வார்களா, அதை விட்டுவிட்டுக் கேவலம்—கூத்தாடிகள் ஆடுகிற நடனத்தைப் போய்க் கற்றுக்கொள்ளப் போகிறேன் என்கிறாயே!" என்று கோபத்துடன் சொன்னாள், அம்மா.

"இல்லே அம்மா, கோடி வீட்டுக் கோமளம், பக்கத்து வீட்டிலே இருக்கிறாரே பாரிஸ்டர் பரமசிவம், அவர் மகள், இன்னும் ஐ. ஸி. எஸ். அனந்தராமனின் பெண், இவர்களெல்லாம் கற்றுக் கொள்கிறார்களம்மா. நான் ஏன் கற்றுக்கொள்ளக் கூடாது?"

எப்படியோ அழுது அடம்பிடித்துத் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டாள் என் அக்கா.

மறுநாள் முதல் எங்கள் வீட்டில் சதங்கைச் சப்தம் கேட்க ஆரம்பித்தது. இன்னும் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறது! என்றுதான் முடியப் போகிறதோ தெரியவில்லை. 'செட்டியார் சிங்காரிப்பதற்குள் பட்டணம் பாழாய்ப் [illegible]ப்விடும்' என்று ஒரு பழமொழி [illegible]க்கிறதல்லவா, அது சுத்தத் தப்பு. என் அக்கா சிங்காரிப்பதற்குள் பட்டணம் பாழாய்ப் போய், மறுபடியும் புதிய சகாப்தம் ஆரம்பமாகி விடும் என்பதுதான் சரி!

ஆறுமணி சினிமாவுக்குப் போகிறதானால் பகல் இரண்டு மணியிலிருந்து புடவை மாற்றுவது, பின்னல் போடுவது, பவுடர் அடிப்பது ஆகிய 'மேக்கப்' வேலைகள் எல்லாம் முடிந்து சரியாக ஆறேகால் மணிக்கு மேல்தான் சினிமாவுக்குக் கிளம்புவாள்.

"என்னம்மா இது, மணி ஆறேகால் ஆகிவிட்டதே! படம் ஆறு மணிக்கே ஆரம்பமாயிருக்குமே!" என்று அப்பா கேட்டால், "ஹூம், இப்போது மட்டும் என்ன? செய்திப் படம் காட்டிய பிறகுதானே கதையை ஆரம்பிப்பான்? நான் போவதற்கும், கதை ஆரம்பமாவதற்கும் சரியாக இருக்கும்" என்பாள் என் அக்கா.

"ஆமாம், அப்பா. அக்கா சொல்கிறபடி இப்பொழுது புறப்பட்டுச் சாவகாசமாகப் போனால்

ஒன்பது மணி ஆட்டம் பார்க்கச் சரியாக இருக்கும்'' என்று குறுக்கிட்டுச் சொல்வேன், நான்.

அந்தச் சமயத்தில் அக்கா என்னைப் பார்க்கும் பார்வை, ஆஹா, நெற்றிக் கண் மட்டும் இருந்திருந்தால் நிச்சயம் அவள் என்னைப் பொசுக்கிச் சாம்பலாக்கிப் பல் துலக்கியிருப்பாள்! நல்ல வேளை! அது இல்லாததால் நான் பிழைத்தேன்!

என் அக்காவுக்குத் தன்னுடைய எலி வால் கூந்தலின் மேல் அபாரப் பிரியம். இதுவரை அவள் என்னென்ன எண்ணெய்களெல்லாமோ வாங்கித் தடவிவிட்டாள். அவள் கண்ட கண்ட எண்ணெய்களை வாங்கி உபயோகிக்கப் போக, நாளாவட்டத்தில், 'உள்ளதும் போச்சடா நொள்ளைக்கண்ணு!' என்ற பழமொழிப்படி தலைமயிர் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்களில் பாலைவனம் ஆகிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

என் அக்கா கூந்தல் வளர யார்யார் என்ன சொன்னாலும் உடனே அதைச் செய்துவிடுவாள். வீட்டுக்கு வருகிறவர் போகிறவர்களிட மெல்லாம் கூந்தல் வளர யோசனை கேட்பாள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்வார்கள். அவ்வளவும் செய்து பார்த்து விடுவாள்! கூந்தல் வளராமல் போனால் பாதகமில்லை; குறையாமலாவது இருக்கக் கூடாதா?

ஒரு நாள் ஊரிலிருந்து என் மாமா வந்திருந்தார். அவர் என்ன, அறுபதடிக்கூந்தல் வளர்த்தவரா, அல்லது 'கூந்தல் வளர வழி' என்ற புத்தகத்தை எழுதியவரா? அதெல்லாம் ஒன்றும் கிடையாது! என் அக்கா அவரிடம் போய், ''என் மாமா, தலைமயிர் நீளமாய் வளர என்ன செய்யலாம்?'' என்று கேட்டாள்.

''நீளமாய் மட்டும் இருந்தால் போதுமா? அடர்த்தியாயும், நீளமாயும் இருந்தால்தான் கூந்தல் நன்றாக இருக்கும்'' என்றார் அவர்.

''அப்படித்தான் மாமா! அதற்கு என்ன செய்யலாம்?''

''நான் ஒரு பழைய புஸ்தகத்திலே படித்திருக்கிறேன். அதாவது, இப்படிக் கிட்டவா. இதெல்லாம் ரகசியமான விஷயம். இதை யாரிடமும் சொல்லக்கூடாது. அப்படி மீறிச் சொன்னால், கூந்தல் வளராதது மட்டுமல்ல! மிகவும் விகாரமாகவும் போய்விடும். அதாவது, அமாவாசையன்று நடுராத்திரி ஒரு மணிக்கு எழுந்து கிழக்குப் பார்த்த முகமாக நின்று கொண்டு, ''ஏ...சண்டி, சாமுண்டி....ஆங்காரி... ஓங்காரி, அறுபதடி கூந்தல் ஆக்குவாயே!'' என்ற மந்திரத்தை ஒன்பது தடவை உச்சரித்துவிட்டு, உன் தலைமயிரில் சரியாக இரண்டு அங்குலம் கத்திரித்துவிட வேண்டும். அடுத்த அமாவாசைக்குள் பாரேன்'' என்றார் மாமா!

''என் மாமா, ஒரே ஒரு மயிரை மட்டும் இரண்டு அங்குலம் கத்திரித்தால் போதுமா?''

''நீ எதைக் கத்திரிக்கிறாயோ அது மட்டும்தான் வளரும்'' என்றார், மாமா.

மாமா சொல்லிவிட்டுப் போன படியே அக்கா அமாவாசையன்று செய்தாள். மறுநாள் அவள் தலைமயிரைப் பார்த்த எல்லோரும், ''என்னடி இது! பன்றி வால் மாதிரி உன் சடைகுட்டையாக இருக்

கிறதே! என்று கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்களிடம், கூந்தல் வளருவதற்காகவே அப்படிச் செய்ததாக அக்கா சொல்லவேயில்லை. அதைச் சொன்னால் எங்கே மந்திரம் பலிக்காமல் போய்விடுமோ என்ற பயம்!

மாமா சொல்லிவிட்டுப் போனபடி அடுத்த அமாவாசைக்குள் அக்காவின் கூந்தல் அறுபதடியாக வளரவில்லை. அதற்குப் பதில், பள்ளிக்கூடச் சிநேகிதிகளெல்லாம் அக்காவின் தலைமயிரைப்பார்த்து, "மொட்டை வால், பன்றி வால்" என்று கேலிசெய்ய ஆரம்பித்து விட்டார்கள். இதனால் அக்காவுக்குச் சரியான ஜுரம் வந்து விட்டது (ஜுரமும் இல்லை, ஒன்றும் இல்லை. ஜுரம் வந்ததாகப்பள்ளிக்கூடத்திற்கு 'லீவ் லெட்டர்' அனுப்பிவிட்டு) கூந்தல் பழைய நிலை அடைகிற வரையில் வீட்டிலேயே இருந்தாள். அதற்குப் பிறகு அவள் யாரிடமும் கூந்தல் வளர வழி கேட்பதில்லை.

'ஸ்நோ', 'பவுடர்', 'ஹேர் ஆயில்', இவைகளுக்காக இது வரையில் என் அக்கா செலவழித்திருக்கிற பணம் இருந்தால், இரண்டு பங்களாவாவது வாங்கி இருக்கலாம். அவ்வளவும் பாழ்!

இங்கேதான் எப்படியோ அடம் பிடித்து, அம்மாவிடம் சொல்லி, அம்மா அப்பாவுக்கு உத்தரவிட்டு, எப்படியோ அக்கா கேட்கிறபொருள்களெல்லாம் வந்து விடுகின்றன. நாளை அவள் கணவன் வீட்டுக்குப் போனால் இப்படியெல்லாம் நடக்குமா? எப்படிப்பட்ட ஆபீஸராயிருந்தாலும் அவர் சம்பாதிக்கிற சம்பளம் என் அக்காவுக்கு பவுடர், ஸ்நோ, வாங்கிக்கொடுப்பதற்குக்கூடக் கட்டுப்படியாகாதே! ஆதலால், ஏ கடவுளே! நீதான் என் அக்காவிடமிருந்து அவளுடைய வருங்காலக் கணவரைக் காப்பாற்ற வேண்டும்!

★

போட்டுப் பாருங்கள்!



● கல்வி விழாப் பொதுக் கூட்டத்தில் பலத்த மழை!

—செய்தி

அடடே! அப்படியானுல், இனி மழைக்காகப் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துவதை விட்டுவிட்டு, கல்வி விழாக் கூட்டங்களாகவே நடத்தி விடலாமே!

● சீட்டுக்குப் பணம் கேட்கப் போனவர் கொலை!

—கோவில்பட்டிச் செய்தி

அடராமா! சீட்டுப் பணம் கேட்கப் போனவரின் உயிருக்கே சீட்டுக் கொடுத்து விட்டார்களே!

● இராமாயணம் படித்துக் கொண்டிருந்தவர் வீட்டிற்குள் திருடர்கள் புகுந்து, 4000 ரூபாய் மதிப்புள்ள பொருள்களைத் திருடிச் சென்றுவிட்டனர்!

—திருநெல்வேலிச் செய்தி

பாவம்! வீட்டுக்காரர் அச்சமயம் சீதையைப் பறி கொடுத்த இராமனைப் போல் சித்தம் கலங்கிச் சிலையாக நின்றிருப்பார் என்று நினைக்கிறேன்.

● கடந்த ஆறுமாத காலமாக உணவு உட்கொள்ளாதிருந்து வரும் குடகுப்பெண் தனலட்சுமியின் உடம்பில் அணு சக்தி இருப்பதாகக் கூறப்படுகிறது.

—குடகுச் செய்தி

"ஐயையோ! இந்தச் செய்தி அமெரிக்கர் காதிலே விழுந்தால், அணு குண்டு செய்வதற்கு உதவியாக அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போய்விடுவார்களே!" என்று துடியாய்த்துடிக்கிறான், எங்கள் விஞ்ஞான ஆசிரியரின் மகன் அஞ்ஞான சிகாமணி!

● இரும்புச் சட்டம் விழுந்து இரண்டு தொழிலாளர்கள் பலி!

—தாரு செய்தி

இரும்புச் சட்டம் விழுந்து இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நம் அரசியல் சட்டப்படி என்ன நஷ்ட ஈடு கொடுக்கப் போகிருர்களோ!

● 'டிக்கெட்' பரிசோதகர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் ரயிலில் கைகலப்பு!

—மதுரைச் செய்தி

'டிக்கெட்' பரிசோதனை செய்பவர்களின் பலத்தை மாணவர்கள் பரிசோதனை செய்ய நினைத்தார்களோ, என்னவோ!

● 14—11—52-ல் நேருஜி யின் பிறந்தின விழா குழந்தை கள் தினமாகக் கொண்டாடப் பட்டது.

—புதுடில்லிச் செய்தி

இந்தக் குழந்தைகள் தினத்தில் குழந்தைகள் மட்டுமன்றி, மாஜி குழந்தைகளும் (அதாவது குழந்தை களாக ஒரு காலத்தில் இருந்தவர்கள்) தாராளமாகக் கலந்து கொண்டார் கள் என்பது நமக்குத் தெரியாதா, என்ன?

● தனக்குச் சரியானபடி சாப்பாடு போடவில்லை என்ற காரணத்திற்காக மனைவியைக் கொன்றவர் கைது செய்யப் பட்டார்.

—தூத்துக்குடிச் செய்தி

பாவம்! அவருக்குச் சிறையிலா வது சரியானபடி சாப்பாடு போடப் படும் என்று நம்புகிறேன்.

● வக்கீல் வீட்டில் திருட்டு!

—செய்தி

"இந்தத் திருட்டு வழக்கில் அந்த வக்கீலே தன் சார்பாக வாதாடிவிடு வார். வக்கீல் வைக்கும் செலவு அவ ருக்குத் தம்பிடிகூடக் கிடையாது! அவர் அதிர்ஷ்டமே, அதிர்ஷ்டம்" என்கிறார், ஒரு சிக்கனப் புலி.

● பெண் வேஷத்திலிருந்த ஆண் பிடிபட்டான்!

—திண்டுக்கல் செய்தி

"பெண் வேஷம் போட்ட அவன் சரியாக நடித்திருக்க மாட்டான். தெருவிலே போகும் போது, ஜவுளிக் கடை, நகைக்கடை, வளையல் கடை களை யெல்லாம் கூர்ந்து கூர்ந்து பார்த்துக் கொண்டே சென்றிருந் தால், அவன் மேல் சந்தேகமே வந் திருக்காது. நேராக ஆண்போல் நடந்திருப்பான்; அகப்பட்டுக் கொண்டான்!" என்கிறான் என் அருமை அண்ணி.

● ரோம் நகரப் பொழுது போக்குச் சங்கம் ஒன்றில் நடந்த சீட்டாட்டத்தில் எகிப் தின் மாஜி மன்னர் பரூக் மூன்று மணி நேரத்தில் ரூபாய் 80,000 இழந்துவிட்டார்.

—ரோம் செய்தி

பூ! அவ்வளவு பெரிய எகிப்து நாட்டையே இழந்தவருக்கு அந்த எண்பது ஆயிரம் ரூபாய் என்ன பிரமாதம்!

● ஒவ்வொருவருக்கும் 'சைக்கிள்' இன்றியமையாதது. ஆகவே 'சைக்கிள்' விலை நூறு ரூபாய்க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

—தொழில்மந்திரி பூ. கிருஷ்ண ராவ்

'அடராமா! 'சைக்கிள்' ஒவ் வொருவருக்கும் இன்றியமையாததா? இப்பொழுதே என் பிள்ளை யாண்டான் வாடகை 'சைக்கிள்' எடுத்து தினம் ஓர் உறுப்பை (தன் உறுப்பைத்தான்; 'சைக்கி'ளின் உறுப்பை அல்ல) பழுதாக்கிக் கொண்டு வருகிறானே!......அப்படி யிருக்கும்போது 'சைக்கிள்' விலை குறைந்து, அவனுக்குச் சொந்தத்தில் 'சைக்கி'ளும் வாங்கிக் கொடுத்து விட்டால், அப்புறம் அவன் கதி என்ன ஆவது?' என்கிறார், ஓர் அப்பாவி அப்பா.

—EYE GOD.

தோட்டத் தம்பி

இந்தியாவில் 'தோட்டம்' என்றால் காய் கறிகள் பயிராகும் இடத்தைத் தான் தோட்டம் என்கிறோம். ஆனால், இலங்கையில் அப்படியல்ல. தேயிலைச் செடிகளும், சவுக்கு மரங்களும் நிறைந்த மலைப் பிரதேசங்களையே தோட்டம் என்கிறார்கள்.

இந்தத் தோட்டங்களில் 'அரிசிப் பத்தனைத் தோட்டம்' என்பதும் ஒன்று. அங்கு சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். சங்கரனும், அவனுடைய அம்மாவும் சேர்ந்துதான் அந்த ஆயிரம் பேர்!

அன்று அதிகாலை நேரம். அந்த நேரத்தில் 'விசில்' ஊதும் சப்தம் கேட்டது. உடனே, சங்கரன் விழித்து எழுந்தான். வெளியே வந்து பார்த்தான். இன்னும் நன்றாக விடியவில்லை. மார்கழி மாதக்குளிர் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் புகைபோலப் பனி படர்ந்திருந்தது.

அரிசிப்பத்தனைத் தோட்டத்திற்குப் பத்து மைல் தூரத்தில் 'பதுளை' என்னும் பெரிய பட்டணம் ஒன்று இருக்கிறது. ஆனால், ஐந்து மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய பட்டணத்தில்தான் அங்குள்ள தொழிலாளர்கள் சாமான்கள் வாங்குவார்கள். மலையில் பெரும் வளைவுகள் கொண்ட சாலைகளிலும், மேடும் பள்ளமும் கொண்ட குறுக்குப் பாதைகளிலும் நடந்து நடந்து, தோட்டத்தொழிலாளர்களுக்கு அப்பியாசமாய்ப் போய்விட்டது. புதிதாய்ப் போகிறவர்களுக்கு அம் மலைப்பிரதேசங்களில் உள்ள வழிகள் பயத்தைக் கொடுக்கும். தோட்டத் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு 'லயன்கள்' என்று பெயர். 12 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்ட சிறு அறைதான் அவர்களுடைய வீடு. இப்படிப் பல வீடுகளைச் சேர்த்து நீளமாகக் கட்டியிருப்பார்கள். மூன்று பேருக்கும் அந்த அறைதான்! பத்து பேருக்கும் அந்த அறைதான்! சமையல் அறை, சாப்பாட்டறை, படுக்கை அறை, சாமான்கள் அறை எல்லாம் அந்த ஒன்றேதான்! அப்படிப் பட்ட ஒரு அறையில்தான் சங்கரன் குடும்பம் வசித்து வந்தது.

வெளியே வந்து பார்த்த சங்கரன் திரும்பவும் அறைக்குள் நுழைந்தான். தேத்தண்ணீர் தயாரித்தான். அதை எடுத்துவந்து படுத்துக்கிடந்த அம்மாவிடம் கொடுத்தான். அதைக் கொடுக்கும்போதே "அம்மா, உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். நான் வேலைக்குப் போய்விட்டுச் சீக்கிரம் வந்துவிடுகிறேன்" என்று கூறினான்.

சங்கரனின் தாயார் காமாட்சி ஒரு மாதமாய்ப் படுத்த படுக்கையாகிவிட்டாள். மகனின் வார்த்தையைக் கேட்டதும் அவளுடைய கண்கள் நீரைக் கக்கின. சென்ற காலத்தை அவளால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அப்போது சங்கரனுக்கு நாலுவயது. அவன் அப்பா கருப்பையா பெரிய கங்காணியாக வேறு ஒரு தோட்டத்தில் இருந்தார். காமாட்சி அப்போது சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வந்தாள். கருப்பையா திடீர் என்று

இறந்துவிடவே, காமாட்சியும் சங்கரனும் நிர்க்கதியாய்விட்டனர். தன் கணவனின் கீழ் வேலை பார்த்தவர்களின் முன்னால் நின்று, கூலி வேலை செய்யக் காமாட்சியின் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆதலால், சங்கரனைக்கூட்டிக் கொண்டு இந்தத் தோட்டத்திற்கு வந்து குழந்தையுடன் கூலி வேலை செய்து வந்தாள். வருடங்கள் ஓடிவிட்டன. இப்போது சங்கரனுக்கு வயது பதினைந்து ஆகிறது. அம்மாவிடத்தில் அவன் மிகவும் அன்பாகவும், மரியாதையாகவும் இருந்தான்.

சங்கரன் வேலைக்குப் போவதாகச் சொன்னதும், "சரி அப்பா, போய் வா. இன்று எனக்கு உடம்பு கொஞ்சம் தெம்பாய் இருக்கிறது" என்று கூறி விடை கொடுத்தாள்.

சங்கரன் வேலைக்குப்புறப்பட்டான். சுவரில் தொங்கிய கூடையை எடுத்தான். அதிலிருந்து சில தமிழ்ப் புத்தகங்களும், ஆரம்பப் பாடப் புத்தகங்களான சில ஆங்கிலப் புத்தகங்களும் கீழே விழுந்தன! ஆம்; சங்கரன் தோட்டத்திலுள்ள பள்ளியில் ஏழாம் வகுப்புவரை படித்திருந்தான். அத்துடன் சிரமப்பட்டு சிறிது ஆங்கிலமும் கற்றிருந்தான். ஓய்வு நேரத்தை அவனுடன் வேலை பார்க்கும் மற்றப் பையன்களைபபோல் வீணாக்காமல், படித்த படிப்பைக் கொண்டு அறிவை வளர்த்து வந்தான். கீழே விழுந்த புத்தகங்களை பொறுக்கிக் கூடையில் போட்டுக் கொண்டு மலைக்குக் கிளம்பினான்.

அன்று கொழுந்து எடுக்கச் செல்லவேண்டிய இடம் 'மாடசாமிக் காடு' என்று அழைக்கப்படும் ஒருசிறு காட்டிற்குப் பக்கத்தில் இருந்தது. காட்டிற்குப் பக்கத்தில் தோட்டத்தை மேற்பார்வை பார்க்கும் துரையின் பங்களாவும் இருந்ததால், தொழிலாளர்கள் அவ்விடத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். சங்கரனுக்குப்பின்னே சங்கரன் வயதுடைய மற்றப் பையன்கள் கூட்டமாக வந்துகொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் சங்கரன் கூடையில் கிடந்த புத்தகங்களைப் பார்த்துவிட்டான். அவ்வளவு தான்! "பள்ளிக்குப் போகவேண்டியவர் மறந்து போய்த் தோட்ட வேலைக்கு வந்துவிட்டார் போலிருக்கிறதே!" என்று ஒருவன் கேலி செய்ய ஆரம்பித்தான். உடனே, மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து கேலி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். சங்கரன் இதை எல்லாம் லட்சியம் செய்யவில்லை. மலைக்குச் சென்று, தேயிலைச் செடிகளிலிருந்து கொழுந்தெடுக்க ஆரம்பித்தான்.

மறுநாள் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் நாள். எவ்வளவுக்கெவ்வளவு கொழுந்தெடுக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு

"ஏன் சார், உங்களுக்கு இதுக்கு முன்னாலே எப்போதாவது நான் க்ஷவரம் பண்ணியிருக்கிறேனா?"

"இல்லையப்பா, என் தலையில் இருக்கிற காயம் ஜப்பான் சண்டையிலே ஏற்பட்டது"

—வ. அலமு. சென்னை 13

சம்பளம் இருக்கும். ஆகலால் சங்கரனின் கவனம் எல்லாம் கொழுந்தெடுப் பதிலேயே இருந்தது.

'திடீர்' என்று வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. ஒவ்வொருவரும் அவர்களுடைய கைவேலையைப் போட்டுவிட்டு வியப்புடன் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். சங்கரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

நேரே கொழுந்தை எடைபோட்டுக் கணக்கிடும் கணக்குப் பிள்ளையிடம் சென்று என்னவென்று விசாரித்தான். அவர், "தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளைச் சம்பளம் கொடுப்பதற்காக பதினை 'பாங்கி'லிருந்து நேற்று எட்டாயிரம் ரூபாய் கொண்டு வந்து தரை அவருடைய அறையில் 'பீரோ'வில் வைத்திருந்தாராம். இன்று காலையில் பார்த்தால் அந்த ரூபாய்களைக் காணவில்லையாம்! நம் எல்லோருடைய சம்பளமும் அரோகரா ஆகிவிட்டது!" என்று பதிலளித்தார்.

சங்கரன் இதைக்கேட்டதும் அளவில்லாத் துயரங்கொண்டான். அந்த மாதச் சம்பளத்தில் அம்மாவுக்கு நல்ல மருந்து வாங்கி கொடுக்கவேண்டும்; ஒரு போர்வையும் வாங்கவேண்டும் என்றெல்லாம் அவன் எண்ணியிருந்தான். ஆனால், அதற்குள் இப்படியாகிவிட்டதே!

மாலை ஐந்து மணி ஆகிவிட்டது. 'தொழிலாளர்கள் வீட்டுக்குப் போகலாம்' என்று கூறுவதுபோல் சங்கு ஒலித்தது. பின்னால் கூடை தொங்க, சங்கரன் கவலையுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

மாடசாமிக்காட்டின் அருகே வந்ததும் 'சடக்'கென்று நின்றான். 'அடுப்பெரிக்க வீட்டில் ஒரு குச்சிகூட இல்லையே!' என்று அவன் நினைத்தான்.

காட்டின் ஓரத்தில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதில் காய்ந்த குச்சிகள் நிறைய இருப்பதைக் கண்டான்; கூடையைக் கழற்றிவைத்துவிட்டு மரத்தின்மேல் ஏறிக் குச்சிகளை ஒடிக்க ஆரம்பித்தான். மற்றொரு கிளையில் நிறையப் பட்டுப்போன குச்சிகள் இருப்பது தெரிந்தது. அது மிகவும் பெரிய கிளை! அக்கிளைக்குச் செல்ல முயன்றான், சங்கரன். அப்போது கிளையின் அடிப் பாகத்திலுள்ள ஒரு பெரிய பொந்தில் அவனுடைய பார்வை சென்றது. அம்மாடியோ! சங்கரனுடைய சப்த நாடியும் உடனே ஒடுங்கிவிட்டது! அவன் உடம்பு 'கிடு கிடு' வென்று ஆடியது. கண்களை இறுக மூடிக்கொண்டு மரத்தோடு மரமாக ஒட்டிக்கொண்டான்!

சங்கரனின் இந்தப் பயத்திற்குக் காரணம் என்ன? அந்தப் பெரிய பொந்திலே ஒரு நல்ல பாம்பு தலையை நீட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது! 'கீழே இறங்கினால் ஆபத்து நேரிடும். எப்படி இந்தப் பாம்பிடமிருந்து தப்புவது?' என்று எண்ணலானான், சங்கரன். ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. பாம்பு சிறிதும் அசையவில்லை! சங்கரனுக்கு ஓரளவு தைரியம் வந்துவிட்டது.

உடனே, ஒரு குச்சியை ஒடித்துப் பாம்பின்மேல் படும்படி வீசினான். அப்பொழுதும் பாம்பு அசைந்துகொடுக்கவில்லை! இது சங்கரனுக்குப் பெரும் ஆச்சரியமாயிருந்தது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ஒரு நீண்ட குச்சியால் பாம்பின் தலையில் தட்டினான். 'பொத்! பொத்!' என்ற சப்தம் கேட்டது. குச்சியினால் பாம்பை மெல்லப் புரட்டினான். பிறகு தன்னை மறந்து 'கட கட' வென்று சிரித்துவிட்டான். ஏன்? அது ஒரு நிஜப்பாம்பல்ல; ஆனாலும், நிஜப்பாம்பைப்போல் செய்யப்பட்ட ஒரு ரப்பர் பாம்புதான்!

அந்தப் பாம்பு ஏன் அந்தப் பொந்திற்கு வந்தது? வெகு அலட்சியமாகப் பாம்பைப் பிடித்து வெளியே இழுத்தான். உள்ளே ஏதோ வெள்ளையாகத் தெரிந்தது. அதை வெளியில் எடுத்தான், ஆவலுடன். அது ஒரு சிறு மூட்டை! திகைப்புடன் அவிழ்த்துப் பார்த்தான். கற்றை கற்றையாக உள்ளே இருந்தன நோட்டுக்கள்! துரை பங்களாவில் பணம் களவுபோன விஷயம் பளிச்சென்று அவன் நினைவுக்கு வந்தது. சங்கரன் விரும்பினால் அவ்வளவு பணத்தையும் மறைத்துவிடலாம். அவனைப்போல்வறுமையால் வாடும் ஆயிரம் தொழிலாளர்களின் ஊதியம் அவன் கையில் இருந்தது! சம்பள நாளை எத்தனை உள்ளங்கள் ஏக்கத்தோடு எதிர்நோக்கி இருக்கின்றன! அந்த மூட்டையை அப்படியே தூக்கிக்கொண்டு துரை பங்களாவை நோக்கித் தலை தெறிக்க ஓடினான், சங்கரன். துரையின் நாய் சங்கரனைக் கண்டதும் பலமாகக் குரைக்க ஆரம்பித்தது. நாயின் குரல் கேட்டு துரையும், அவருடைய வேலையாட்களும் வெளியில் வந்தார்கள். சங்கரன் மூட்டையைத் துரையிடம் கொடுத்து நடந்ததைக் கூறினான். எல்லோருக்கும் இது பெரும் வியப்பைக் கொடுத்தது.

பணத்தைத் திருடி மரப்பொந்தில் வைத்து, அதற்குப் பாதுகாப்பாகவும், மற்றவர்கள் அம்மரத்தில் ஏறுமல் இருப்பதற்காகவும் ரப்பர் பாம்பை வைத்தது யார்? உடனே துரையின் கண்கள் பணம் வைத்துக் கட்டப்பட்டிருந்த துண்டை ஆராய்ந்தன. ஒரு மூலையில் S. M. என்று சிகப்பு நூலால் தைக்கப்பட்டிருப்பதைத் துரை கண்டார். 'சடக்' கென்று அவர் துண்டைக் கையில் எடுத்தார். உடனே பங்களாவில் வேலை பார்ப்பவர்களுக்குத் துவைக்கும் சலவைத் தொழிலாளியை அழைத்துவரச் செய்தார். எல்லாம் வெட்டவெளிச்சமாகிவிட்டது!

துண்டுக்குரியவன் அநேக ஆண்டுகளாகத் துரையிடம் வேலைபார்ப்பவன்; பங்களாவின் பணியாட்களில் தலைவனாக இருப்பவன்; துரையின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். என்ன பயன்? 'முத்துபண்டா' என்ற அவன் உண்ட வீட்டிற்கே பாதகம் செய்துவிட்டான். அவனுக்குத் துரைகொடுத்திருந்த ஏகபோக உரிமையில், பணத்தையும் திருடிவிட்டான்! முத்துபண்டாவின் கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. சங்கரனுக்கு 1000 ரூபாய் இனும் கொடுக்கப்பட்டது. அத்துடன், அவன் துரையின் விசேஷ தனிப்பட்ட அன்பிற்கும் உரியவனானான்.

சில நாட்களில் அரிசிப்பத்தனைத் தோட்டத்தில் 'சங்கரன் ஸ்டோர்' என்ற சகல சாமான்களும் கொண்ட பெரிய கடையைத் துரை திறந்து வைத்தார். எல்லோரும் சங்கரனைப் போற்றினார்கள். சங்கரன் கடையில் நல்ல வியாபாரம்! அரிசிப் பத்தனைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஐந்துமைல் சென்று சாமான்கள் வாங்கும் கஷ்டம் அடியோடு தொலைந்தது!

[இக்கதையை இலங்கையிலிருந்து ஒரு தம்பி எழுதியிருக்கிறான். ஆனால், அவன், தன் பெயரைக் கதையிலே குறிப்பிட மறந்துவிட்டான்! பெயரை அறிவித்தால் அடுத்த இதழில் வெளியிடுவோம். —ஆசிரியர்]



தாரா சிங்

"டேய், நான் கிங்காங்கைப் பார்த்தேன். அவர் என் முதுகிலே தட்டிக் கொடுத்தார்."

"நான்கூடத்தான் தாராசிங்கைப் பார்த்துக் கை குலுக்கினேன். அப்பா! அன்று இரவெல்லாம் என் கை ஒரே வலியாய் வலித்தது."

"நான் கிங்காங்—தாராசிங் சண்டையைப் பார்த்தேன். நீ பார்த்தாயோ?"

இவ்வாறு சென்ற மாதம் முழுவதும் சென்னை நகரச் சிறுவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிப் பெருமைப்பட்டனர். சிறியவர், பெரியவர், எல்லாரும் கடைத்தெருவிலும், கடற்கரையிலும், வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், காரியாலயத்திலும் சென்னையில் நடந்த சர்வ தேச மல் யுத்தங்களையும், போர் புரிந்த மல்லர்களையும் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

சென்ற ஒருமாத காலத்தில் விட்டுவிட்டு, பதினாறு தினங்களில் மொத்தம் முப்பத்தைந்து ஜதைகளுக்கு மேல் சர்வதேச மல் யுத்தம் நடந்தது. இதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள் ஒன்பது பேர்.

1. **கிங்காங்**— ஹங்கேரிய வீரர்
2. **கோல்ட்ஸ்டீன்** — பாலஸ்தீன வீரர்
3. **தாராசிங்** — இந்திய வீரர்
4. **ஸெர்கி ஆர்லாப்**—ரஷ்ய வீரர்
5. **பாரன் வான் ஹெக்ஸி** —ஆஸ்திரிய வீரர்
6. **டைகர் ரே ஹோல்டன்**—ஆஸ்திரேலிய வீரர்
7. அலி ரீஸாபே—துருக்கிய வீரர்
8. ஜிபீஸ்கோ—போலந்து வீரர்
9. வான்-பக்-லீ—ஜப்பானிய வீரர்.

பத்து வருஷங்களுக்கு முன் எப்பொழுதோ இம்மாதிரி மல் யுத்தம் சென்னையில் நடந்தது. மல் யுத்தத்தைப் பார்த்து நாளான படியால் தினம் ஆயிரக்

இரு மகா

சங்கர்—

கணக்கில் ஜனங்கள் சென்று பார்த்துக் களித்தனர்.

நன்கு திரண்டு உருண்ட உடல்கொண்ட வீரர்களைப் பார்ப்பதிலே ஓர் ஆனந்தம். அவர்கள் ஒருவருடன் ஒருவர் போரிடுவதைக் காணும் போது பார்ப்பவர்களுக்கெல்லாம் உற்சாகம். 'சோனிகள்'கூட தங்கள் உடல் நிலையை மறந்து மார்பைநிமிர்த்தி வீரப் பார்வை பார்த்து, சிங்க நடை நடக்கத் தொடங்கி விட்டார்கள்!

கிங் காங்

ஜனங்கள் மிகவும் போற்றிப் பாராட்டியது தாராசிங் என்ற வீரரை. இவருக்கு வயது 25 தான். ஆனாலும், ஆஜானுபாகுவாக வளர்ந்திருக்கிறார். கம்பீரமான தோற்றம். அழகியமுகம். அவரைப் பார்ப்பவர்கள் எல்லாரும் அவரது வீரப் புன்சிரிப்பில் மயங்கி விடுகிறார்கள் என்று சொல்லலாம்.

தாராசிங் ஆட்ட நுட்பங்கள் நன்கு தெரிந்து, சாமர்த்தியமாக விளையாடினார். தப்பாட்டம் ஆடாமல் அழகாகப் போரிட்டதற்காக அவருக்கு இரண்டு வெள்ளிக் கோப்பைகள் பரிசளிக்கப்பட்டன.

தாராசிங்குக்குத் தன்னம்பிக்கை மிக அதிகம். கிங்காங் என்ற பலம் பொருந்திய வீரரைச் சவால்விட்டு அழைத்த போது அது தெரிந்தது. அவர்கள் இருவரும் ஒரு முறை போரிட்டனர். அப்போது தாராசிங் தோல்வியடைந்து விட்டார். ஆனாலும், உறுதி குன்றாமல் மீண்டும் ஒரு முறை கிங்காங்குக்குச் சவால் விட்டார்.

எல்லாரும் அதிசயப்பட்டனர். "என்ன இது, தாராசிங் எங்கே? தாராசிங்கைப்போல் ஒன்றரை மடங்கு எடையுள்ள கிங்காங் எங்கே? இது வரை யாரும் ஜயித்திராத கிங்காங்கை

மல்லர்கள்

ஸ்ரீநிவாசன்

தாராசிங் எப்படி ஜயிக்க முடியும்?" என்று சொல்லிக்கொண்டனர். கிங்காங்குடன் சண்டை என்றாலே எல்லா மல்லர்களும் நடுங்குவார்கள்.

ஆனால், தாராசிங் நடுங்கவில்லை. கிங்காங்குடன் ஒரு முறையல்ல, நான்கு முறை அவர் போரிட்டார். அதில் ஒரு முறை வெற்றியும் பெற்றுவிட்டார். அச்சண்டைகளில் அவர் யானை போன்ற கிங்காங்கின் மேல் பாய்ந்து பாய்ந்து போரிட்டதைப் பார்த்தபோது தாராசிங் உடல் உறுதி மட்டும் பெற்றிருக்கவில்லை; மன உறுதியும் நிரம்பப் பெற்றவர் என்பது தெரிந்தது.

கிங்காங் சாதாரணமானவரல்லர்; உலகிலேயே அவர் தலை சிறந்த மல்லர். இப்போது வயது 42. ஆறடி உயரம் 367 பவுண்டு எடை. மார்பின் சுற்றளவு 59½ அங்குலம். சென்ற 24 வருடங்களாக இந்த மல்வித்தையில் அவர் பழகி வருகிறார்.

"இதில் நாலு வருஷங்களுக்கு மேல் ஆஸ்பத்திரியில் கழிந்தது. என் உடலில் உடையாத எலும்பில்லை; காயம் படாத பாகம் இல்லை" என்று சொன்னார் கிங்காங்.

1954ம் வருட ஆரம்பத்தில், மல்யுத்தத்திலிருந்து தாம் விலகப்போவதாக அவர் சொன்னார். இப்போது சிங்கப்பூரில் அவர் வசித்து வருகிறார். அங்கே ஒரு ஜிம்னசியம் (உடற் பயிற்சிக் கழகம்) நடத்துகிறார். அங்கு, சுமார் நூறு பேர் தினமும் உடற் பயிற்சி பெறுகிறார்கள். தாம் 'ரிடையர்' ஆனதும் சொந்தமாக ஒரு மல்யுத்தக் 'கம்பெனி' நடத்தப்போவதாகச் சொன்னார்.

தம்முடன் நான்கு முறை சண்டையிட்ட தாராசிங்கை அவர் வெறுக்கவில்லை; அதற்கு மாறாகத் தாராசிங்கை மிகவும் புகழ்ந்து கூறினார். "தாராசிங் நேர்மையாகச் சண்டையிடுகிறார்; அவர் பலசாலியான இளைஞர்; சீக்கிரத்தில் முன்னுக்கு வருவார்; ஒரு நாள் உலக மகா மல்யுத்த வீரராகவும் திகழலாம்" என்றார்.

ஒரு பெரிய வீரன்தான் மற்றொரு வீரனை இப்படிப் பாராட்டிப் பேச முடியும்.

இவர்களிடையே நாலாவதாக நடந்த மல் யுத்தம் எவருக்கும் வெற்றி தோல்வியில்லாமல் ('டிரா'வில்) முடிந்தது. ஆட்டம் முடிந்ததும், சிலர் தாராசிங்கிற்கு மாலையிட்டனர். வயதில் சிறியவரான அவர், உடனே கிங்காங்கிடம் சென்று தம் கழுத்திலிருந்த மாலையை எடுத்து அவர் கழுத்தில் மாட்டிக் கை குலுக்கினார். இரு பெரும் வீரர்கள் இவ்வாறு நின்ற அதிசயக் காட்சியைக் கண்ட மக்கள் அவர்கள் இருவரையும் பாராட்டினர்!

அவர்கள் இருவரும் தலை சிறந்த மல்லர்களே. சந்தேகமில்லை!

—போட்டோ : டி. சங்கர்

●

★

முன் எச்சரிக்கை

மளிகைக் கடை மருத முத்துவுக்கு ஏக குஷி!

காரணம் லேசுப்பட்டதல்ல. அவரது அருமை மகன் அப்புசாமி பரீட்சையில் வெற்றி அடைந்துவிட்டான்! சாதாரண வெற்றியாக இருந்திருந்தால், மருதமுத்துவின் 'ஏக' குஷிக்கு இடமே இருந்திருக்காது. ஆனால், அவர் மகன் அடைந்ததோ மகத்தான வெற்றி. ஆமாம்! ஏழாவது வகுப்பில் இரண்டு வருஷங்களும், எட்டாவது வகுப்பில் மூன்று வருஷங்களும் முற்றுகையிட்ட பிறகு (நவீன கஜினி முகம்மதுவாக) தேறி இருந்தான், அப்புசாமி!

மருத முத்துவின் 'இரண்டும் கெட்டான்' ஊரிலே எட்டாவது வகுப்புக்கு மேல் கிடையாது.

ஆகவே மருதமுத்து, தமது வெற்றிவீரன் பின்தொடர பக்கத்து நகரை அடைந்தார். அங்கே ஒரு பள்ளியில் படாத பாடுபட்டு அப்புசாமியை ஒன்பதாவது வகுப்பில் சேர்த்ததோடல்லாமல், அப்படியே ஒரு 'ஹாஸ்டலி'லும் அவனைச் சேர்த்து விட்டார்.

மருத முத்துவுக்குத் தம்முடைய மகனைவிட்டுப் பிரிவதற்கே வருத்தமாக இருந்தது. என்ன செய்வது? அவரும் 'ஹாஸ்ட'லிலே தங்கிவிட முடியுமா? ஊருக்குப் புறப்பட்டார். புறப்படும்போது அப்புசாமிக்குக் கூறிய புத்திமதிகளுடன், "தம்பி அப்பு! புத்தகங்களை எல்லாம் புதிதாகவே வாங்கிவிடு. பழைய புத்தகங்கள் எதையும் வாங்கவேண்டாம். நன்றாகப் படி. அடிக்கடி கடிதம் எழுதத் தவறாதே! தேவைப் பட்டபோது பணத்திற்கு எழுது" என்று கூறிவிட்டு, பிரியா விடை பெற்று ஊருக்குத் திரும்பினார்.

அப்புசாமியிடமிருந்து தினம் தவறாமல் கடிதம் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கடிதத்திலும் 'அதற்கு, இதற்கு' என்று ஏதாவது காரணம் காட்டிப் பணம் கேட்டுக் கொண்டேயிருந்தான், அப்புசாமி.

சளேக்காமல் பணம் அனுப் பிக்கொண்டே வந்தார், மருத முத்து!

எத்தனை நாட்களுக்குத்தான் இப்படியே அனுப்பிக்கொண் டிருப்பார்! ஒரு நாள், என்ன நினைத்தாரோ என்னவோ, திடீ ரென்று கணக்குப் பார்க்க உட் கார்ந்தார். 'சொரே'ரென்றது அவருக்கு! அளவுக்கு மீறி அப்பு சாமிக்குப் பணம் அனுப்பி விட்டதாகக் கணக்குப் புத்தகம் காட்டியதே அவரது திகைப்புக் குக் காரணம்!

அந்தத் திகைப்பு அடங்குவதற் குள்ளேயேஅன்று ஒருகடிதம்வந்தது அப்புசாமியிட மிருந்து.கடிதமோ வழக்கம்போல் பணத்திற்கு 'நோட்டீஸா'கத் தான் இருந்தது.

ஆனால், காரணம் புதுமாதிரி! 'வாங்கிய புத்தகங்களை எல்லாம் 'பைண்ட்' செய்ய ரூபாய் 10 ஆகும். அவசரம்! உடனே அனுப்பவும்.' இவைதான் கடி தத்தின் பிரதான வாசகங்கள்!

மருதமுத்துவுக்கு அசாத்தியக் கோபம்! கோபத்தோடு கோப மாக ஒரு கடிதத்தையும் எழுதி னார்.

"புத்தகங்கள் எல்லாவற் றையும்தான் புதிதாக வாங்கி விட்டாயே! அப்புறம், எதற் காக 'பைண்ட்' வேறு செய்ய வேண்டும்? எதற்காக இம்மா திரி அநாவசியமான செலவெல்லாம்?" என்ற கோப மான வார்த்தைகளையும் அதில் கலந்துவிட்டார்.

பையன் அடங்கி விடுவான் என்றுதான் அவர் நினைத்தார். ஆனால், மூன்றாவது தினமே அடுத்த கடிதம் வந்துவிட்டது, அதே அப்புசாமியிடமிருந்து!

"அன்புள்ள அப்பாவுக்கு,

புத்தகங்களை எல்லாம் புதிதா கத்தான் வாங்கினேன். புதிதாக வாங்கினாலும்கூட அது எத் தனை வருஷங்களுக்கு உழைத்து விடும் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர் கள்? இப்போதே நன்றாக 'பைண்ட்' செய்து விட்டால் தானே கிட்டத் தட்ட இரண்டு மூன்று வருஷங் களுக்காவது உழைக்கும்? நம் மால் வருஷத் திற்கு ஒருமுறைவாங்கிக்கொண் டிருக்க முடியுமா? அப்படி இருக்கையில் இது எப்படி அநா வசியச் செலவாகும்? உடனே பணத்தை அனுப்புங்கள்.

அன்புள்ள,

அப்பு

கடிதத்தைப் படித்து முடித்த மருதமுத்து தம்முடைய தவப் புதல்வனின் 'முன் எச்சரிக் கை'யை எண்ணி வியந்திருப் பாரா? அல்லது, அவனது தன் னம்பிக்கையை நினைத்துச் சந் தோஷப்பட்டிருப்பாரா? நீங்கள் தான் முடிவுகட்டவேண்டும்!

— **'மின்மினி'**

★ ★ ★

ஊர் வம்பு

"டேய், சுந்தரம்! நம் ஜானகி இருக்கிருளே, அவளை நேற்று வாத்தியார் அடி, அடியென்று நன்ருக அடித்து விட்டாரே, தெரியுமா? பாவம்!" என்று அனுதாபப் பட்டான் ராஜாமணி.

"போடா, பாவமாவது! அந்தக் கழுதை நேற்றுக் காலையில் என் தங்கை லலிதாவை, காலைத் தட்டி விழவைத்தது மட்டும் பாவமில்லையாக்கும்!"—இது சீனு.

"அது கிடக்கட்டும். நேற்று நம் குப்பன் 'பாப்பிரம்மம்' போனுமே; படம் எப்படி?" என்று குறுக்கே ஒரு கேள்வி போட்டான், மணி.

"படம் பூராவும் ஒரே வசவு தானும்! சல்லிக்குப் பிரயோசன மில்லையாம்" என்ருன் கணேசன்.

"நம் நேருஜி பேச்சைப் படித்தீர்களாடா! என்ன ஜோராக இருக்கிறது? அவர் மாதிரி நானும் ஒரு பெரிய பேச்சாளராகப் போகிறேன். என்ன, சுந்தரம்?" என்று கேட்டான் வேணு.

"அவ்வளவுதான்; அடுத்த மாதமே ஒரு வீடு கட்டிவிடலாம் நீ!" இது கணேசன்.

"ஏன்? அவன் மேல் விழுகிற கல்லையெல்லாம் பொறுக்கி, ஒரு பங்களாக்கட்டி விடலாம் என்கிருயா?"—இது சுந்தரத்தின் விளக்கம்!

"ஏண்டா இப்படி வெட்டிப் பேச்சுப் பேசுகிறீர்கள்? இப்போது ராஜு வரவேண்டும்; வேடிக்கையாக இருக்கும்!"

"ஆமாம், அவர் புத்திமதிகளை யெல்லாம் உடைப்பிலே கொண்டு போய்ப்போடு! நாங்கள் என்ன பண்ணிக்கொண்டிருந்தால், அவனுக்கென்ன? ஏதோ அறுபது வயதுக் கிழவர் மாதிரி அறிவு சொல்ல வந்துவிடுகிருன்!" என்ருன் சுந்தரம்.

இப்படி வகுப்பில் ஆரம்பித்த வம்பு, உலகம் சுற்றி, பின் தங்கள் விஷயம் வரை வந்துவிட்டது. அந்தக் கட்டத்திலே, ராஜுவும் வந்துவிட்டான்!

வழக்கமாகவே ராஜு கச்சிதமான பேர்வழி. (பேச்சில்) 'ஊர் வம்பு' அடிப்பவர்களைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. திட்டிக்கூட விடுவான்.

இன்றுமட்டும் சும்மா இருந்துவிடுவான? "டேய், என்ன பையன்களடா, நீங்கள்? உப்புச்சப்பற்றவிஷயத்தைப்பற்றிப் பேசுவதில் உங்களுக்கேன் இவ்வளவு ஆர்வம்? இதனுல் ஏதா

வது பிரயோஜனம் உண்டா? அறிவு அற்றவர்களா நீங்கள்? எப்பொழுதும் 'ஊர் வம்பு' தானா? சே......நல்ல நண்பர்கள்...'' என்று கடுகடுப்போடு கூறினான், ராஜு.

உண்மையிலேயே எல்லோரும் பயந்து விட்டார்கள்! ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தார்கள்.

ராஜு ஒரு நாற்காலியில் போய் உட்கார்ந்து அன்றையப் பத்திரிகையின் ஒரு பகுதியில் கவனத்தைச் செலுத்தினான்.

அப்போது, இந்தக் குறும்புக்காரக் கணேசன் சும்மா இருக்கக் கூடாதா? மெள்ள மெள்ள ராஜுவின் பக்கம் போனான். ராஜு எந்தப் பகுதியைப் படிக்கிறான் என்று பார்த்தான்.

அவ்வளவுதான்! அவனுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்துவிட்டது! அடக்கிக்கொண்டு, எல்லோரையும் அங்கு வரும்படி சைகை செய்தான். எல்லோரும் வந்தார்கள்; பார்த்தார்கள்; வயிற்றைப்பிடித்துக்கொண்டு சிரிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்!

இதையெல்லாம் உணர்ந்த ராஜு தலையைக் கவிழ்த்துக்கொண்டான்!

இன்னுமா உங்களுக்கு விளங்கவில்லை? வேறொன்றுமில்லை; ராஜு அந்தப் பத்திரிகையில் மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தது, 'ஊர் வம்பு' என்ற பகுதியைத்தான்!

—சேது

★ ★ ★

வேஷக்காரன்

கிருஷ்ணமூர்த்தி 'கிரிக்கெட் மாட்சுக்'குப் போவதற்காக அழகாக உடை உடுத்துக்கொண்டு வந்தான். அப்போது பெரும் விபத்திற்குள்ளானவன் போல் அங்கமெல்லாம் கட்டுகளுடன் வாசலில் ஒரு பிச்சைக்காரன் தோன்றினான்!

"ஐயா, தர்மம் கொடுங்கள் ஐயா!" என்றான், அவன். அவனைப்பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. எத்தனை கட்டுகள்! வலது கையில் மூன்று கட்டு; இடது கையில் ஒரு கட்டு; வலது காலில் இரண்டு கட்டு; இடது காலில் இரண்டு கட்டு; தலையில் ஒரு கட்டு!

"ஏனப்பா, ஏதாவது கார் விபத்தில் சிக்கிக்கொண்டாயா? இத்தனை காயங்கள் எப்படி வந்தன? பேசாமல் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கலாமே! காயங்களும் ஆறி விடும். சாப்பாட்டுக் கஷ்டமும் இராது" என்றான் கிருஷ்ணமூர்த்தி, அன்பு ததும்பும் குரலில்.

"என்ன செய்வது தம்பி! கார் விபத்தல்ல; ரயில் விபத்தில்தான் சிக்கிக்கொண்டேன். ஆஸ்பத்திரியில் இடமில்லையாம்!

விபத்திலேயே இந்தப் பாவியின் உயிர் போயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஏனோ கடவுள் இப்படிச் சோதிக்கிறார்!" என்று அழாத குறையாகச் சொன்னான், அந்தப் பிச்சைக்காரன்.

"சரி, நான் ஒரு மருந்து தருகிறேன். மூன்று நாட்களில் வலி மறைந்துவிடும்" என்று சொல்லிக்கொண்டு உள்ளே ஓடினான், மூர்த்தி. ஆமாம், இதுதான் அப்பா அம்மா அவனைச் செல்லமாக அழைக்கும் பெயர். ஓடிப்போய் அப்பாவிடத்தில் விஷயத்தைக் கூறி மருந்துகேட்டான். உடனே அவர், "ஏண்டா இது என்ன! இலவச வைத்தியசாலை என்று நினைத்தாய்? போடா போ" என்று உறுமினார்.

"பாவம், அப்... ..." மூர்த்தி வார்த்தையை முடிக்கவில்லை.

"என்னடா பாவம்? பேசாமல் போகிறாயா, என்ன?" அவனை விரட்ட ஆரம்பித்துவிட்டார்.

"காசாவது கொடுப்போம்" என்று அம்மாவிடம் போய்க் கெஞ்சி ஒரு நாலணா வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்! நொண்டியைக் காணவில்லை! "மருந்து என்றதும் குழந்தையைப்போல் பயந்து ஓடி விட்டான் போலிருக்கிறது!" என்று கூறித் தனக்குள் சிரித்துக் கொண்டே காசைப் பைக்குள் போட்டுக்கொண்டு 'மாட்சு'க்குப் போய்விட்டான்.

மாலை சுமார் ஆறு மணி இருக்கும். மூர்த்தி வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். சற்று தூரத்தில் ஒரு பிச்சைக்காரன்போவது தெரிந்தது. கூர்ந்து பார்த்தான். ஆமாம், சந்தேகமேயில்லை! முன்பு பார்த்த அதே பிச்சைக்காரன்தான்! உடனே பேசாமல், அந்த இடத்திலேயே நின்று அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்தான்.

அப்போது அந்தப் பிச்சைக்காரன், ஊர் எல்லையைத் தாண்டி ஒரு குடிசைக்குள் நுழைந்து கதவையும் அடைத்துக்கொண்டு விட்டான்! உடனே, கிருஷ்ண மூர்த்தியும் அந்தக் குடிசையை நோக்கிச் சென்றான்.

"என்ன செய்கிறான் பார்க்கலாம்" என்று நினைத்துக் கொண்டு குடிசைக்கதவிலுள்ள சாவித் துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்தான். என்ன ஆச்சரியம்! அந்தப் பிச்சைக்காரன் உடம்பிலிருந்த கட்டுகளையெல் அவிழ்த்துக் கொண்டிருந்தான். கட்டுகளை அவிழ்த்து விட்டு குஸ்திபோடத் தயார் செய்வது போல் கையையும் காலையும் மடக்கி உதறிக்கொண்டிருந்தான்! மூர்த்திக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது! "வேஷக்காரன்! இவனை உதை உதையென்று உதைத்தாலும் என் ஆத்திரம் தீருமா? பசுத்தோல் போர்த்த புலி! என்று திட்டிக் கொண்டே வீடு திரும்பினான்.

—M. K. மணி

சிபார்சு

எஸ். என். கே. ராஜன்

சோமசுந்தரம் ஒரு மிராசுதார். சேலத்தை அடுத்த ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். வயது நாற்பது. நாகரிகத்தின் உச்சாணிக் கிளையை எட்டிப்பிடித்த இவ்வையகத்தில் அவர் ஒரு கிராமவாசியாகவே இருந்தார். இருந்தாலும், அவர் கருணை உள்ளம் படைத்தவர்; வறுமையால் வாடும் வறியோர்க்கு இல்லை என்று சொல்லாது வாரிக் கொடுக்கும் வள்ளல்! அதனால், அவர் ஊரிலே உயர்வடைந்தார்; ஏழை எளியவர்களால் போற்றப் பட்டார்.

காலமாற்றத்தின் காரணமாகச் சோமசுந்தரத்தின் நிலைமையும் மாறியது. பருவ மழை தவறியதால் பயிர் பச்சை விளைந்து பலனைக் கொடுக்கவில்லை. சோற்றுக்கே திண்டாட்டமாகிவிட்டது! நல்ல காலத்தில் அவரைக் கண்டு மனம் புழுங்கியவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியால் பூரிப்படைந்தனர். மீண்டும் நல்ல காலம் வரும் வரை நிலங்களை அடகு வைத்து, அப்பணத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்தார், சோமசுந்தரம். அதுபோல 'பிமல்சந்த்' என்ற மார்வாடியிடம் நிலங்களை அடகு வைத்துவிட்டார்.

காலத் தேய்வினால் சில வருடங்கள் மாறி மறைந்தன. பஞ்சத்திற்குத் தஞ்சம் கொடுத்த நாடு மீண்டும் தலை தூக்கவில்லை. சோமசுந்தரத்தினால் பிமல்சந்திடம் வாங்கிய கடனுக்குச் சரிவர வட்டியும் செலுத்த முடியவில்லை. அதைக் கண்ட பிமல்சந்த் தவணையொன்றைக் குறித்து, அதற்குள் வட்டியும் முதலும் செலுத்தப்படாவிட்டால், நிலங்களைத் தனதாக்கிக் கொள்ளப் போவதாக, வக்கீல் 'நோட்டீஸ்'ம் அனுப்பி விட்டான். வக்கீல் 'நோட்டீ'ஸைக் கண்டு வேதனைப் பட்டார், சோமசுந்தரம். என்ன செய்வதென்று அறியாமல் மனங்குன்றிப் போனார்.

அப்பொழுது அவரது மனைவி, "கோயமுத்தூரிலிருக்கும் சிதம்பரம் பிள்ளையிடம் போய்வாருங்களேன். நம்மால் அவர் பெருத்த நன்மை அடைந்தவர். இப்பொழுது நமது கஷ்ட காலத்தில் அவர் உதவி செய்யாமல் போய்விடுவாரா?" என்றாள்.

அதுவும் சரியென்று தோன்றியது, சோமசுந்தரத்திற்கு.

சிதம்பரம் பிள்ளை சிறு வயதிலே இன்னல்கள் பல அனுபவித்து, சோற்றுக்கே திண்டாடி, வாழ வகையறியாது சோமசுந்தரத்தினிடம் அடைக்கலம் புகுந்தார். இளகிய மனங்கொண்ட சோமசுந்தரம் சிதம்பரத்திற்குப் பொருளுதவி செய்து ஏதாவது வியாபாரம் நடத்த வகைசெய்து கொடுத்தார். பொருளுதவி

பெற்ற சிதம்பரம் கோயமுத்தூருக்குச் சென்று சிறு அளவில் வியாபாரத்தை ஆரம்பித்தார். திடீரென்று கிளம்பிய யுத்தகால அதிர்ஷ்ட தேவதையின் அபூர்வ கடாட்சம் சிதம்பரத்தின் மேலும் விழுந்தது. நூல் வியாபாரம் செய்து விருத்தியடைந்த சிதம்பரம் நாளடைவில் நூல்மில் ஒன்றை ஸ்தாபித்து 'சிதம்பரம் பிள்ளை' ஆனார்!

தமது மனைவியின் யோசனைப்படி, மறுநாளே கோயமுத்தூருக்குப் புறப்பட்டார், சோமசுந்தரம். வெளியுலகத் தொடர்பில்லாமல், தாம் உண்டு, தமது கிராமமுண்டு, தமது வேலையுண்டு என்றிருந்த அவர், ரயில் பிரயாணத்தில் அதிகம் பழக்கப்பட்டவர் அல்லர்!

ரயிலில் அமர்ந்திருந்த சோமசுந்தரத்தின் மனம் அச்சத்தால் 'திக்திக்' என்று துடித்து, ரயில் கிளம்பிச்செல்லும் 'டக்டக்' ஓசையுடன் போட்டியிட்டது! அச்சத்திற்குக் காரணம், கோயமுத்தூர் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது? கோயமுத்தூர் ஸ்டேஷன் வந்து விட்டதென்பதை எப்படி அறிந்து கொள்வது? இரவு நேரத்தில் கோயமுத்தூரில் இறங்கி, சிதம்பரம் பிள்ளையை எங்கே சென்று தேடுவது?—என்பவையே அச்சத்தால் விளைந்த எண்ண அலைகள் அவர் மனக்கரையில் வந்து வந்து மோதின.

அவருக்கு எதிரில் இரண்டு வாலிபர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவனைப்பார்த்து, "ரயில் கோயமுத்தூருக்கு எத்தனைமணிக்குப்போய்ச் சேரும்? கோயமுத்தூர் வந்ததும் தயவு செய்து எனக்குச் சொல்லு, தம்பி!" என்றார்.

அதற்கு அவ்வாலிபன், "அப்படியே சொல்லுகிறேன். கோயமுத்தூர் போய்ச்சேர இன்னும் நான்கு மணி நேரம் ஆகும். உங்களுக்குத் தூக்கம் வந்தால் படுத்துத் தூங்குங்கள். கோயமுத்தூர் வந்ததும் நான் எழுப்பி விடுகிறேன்!" என்றான், சிரித்துக் கொண்டே.

களைப்பும், சோர்வும் கொண்ட சோமசுந்தரம் அவ்வாலிபனின் பேச்சால் தைரியம் அடைந்து தூங்க ஆரம்பித்துவிட்டார்.

"பாவம்! சரியான பட்டிக்காடு போலிருக்கிறது! இவருக்கு ஒரு வேடிக்கை காட்டினால் என்ன, நாராயணா?" என்றான் அவ்வாலிபன், தன் நண்பனைப் பார்த்து.

"என்ன வேடிக்கை காட்டப் போகிறாய், ஆறுமுகம்?" என்று கேட்டான் நாராயணன், வியப்புடன்.

"அதை அப்புறம் பார்த்துக் கொள்ளேன்!" என்று சொல்லி விட்டுப் பேசாமலிருந்து விட்டான் ஆறுமுகம்.

ரயில் இருளைக் கிழித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. சோமசுந்தரம் குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தார். அவருக்குத் துணையாக மற்றெல்லோரும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். நாராயணனும் ஆறுமுகமும் அரட்டையில் புகுந்தனர்.

ரயிலின் வேகம் வரவரக் குறைந்தது. ஈரோடு ஸ்டேஷனை அடைந்து பெரு மூச்சுடன் நின்றது.

'சட்'டென்று சோமசுந்தரத்தைத் தட்டி எழுப்பினான், ஆறுமுகம்.

திடுக்கிட்டெழுந்த சோமசுந்தரம், "என்ன! கோயமுத்தூர் வந்து விட்டதா, தம்பி?" என்று கேட்டார்.

"ஆமாம்! கோயமுத்தூர் தான்! சீக்கிரம் இறங்குங்கள்!" என்று துரிதப்படுத்தினான் ஆறுமுகம்.

பரபரப்புடன் ரயிலை விட்டிறங்கினார், சோமசுந்தரம். மறுகணம் 'பிளேட்பா'ரத்தில் நிறைந்திருந்த கூட்டத்தோடு கூட்டமாக ஐக்கியமாகிவிட்டார்!

அதைக் கண்ட ஆறுமுகம் கொல்லென்று சிரித்தான். "எப்படி நான் செய்த வேடிக்கை?" என்று கூறி விழுந்து விழுந்து சிரித்தான்.

"சபாஷ், ஆறுமுகம்! சரியான வேடிக்கையை ஒரு வினாடியில் செய்துவிட்டாயே!" என்று கூறி உரக்கச் சிரித்தான் நாராயணன்.

இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

சிறிது நேரத்தில் சுத்தமாகவும், நாகரிகமாகவும் உடுத்துக்கொண்டிருந்த ஒரு பெரியவர் அவ்வண்டியில் ஏறி சோம சுந்தரம் உட்கார்ந்திருந்த இடத்தில் அமர்ந்தார்.

குறித்த நேரத்தில் ரயில் ஸ்டேஷனைவிட்டுக் கிளம்பிற்று.

"நான் சொன்னதை வேதவாக்காக நம்பிவிட்டான், அந்தப் பட்டிக்காட்டான்! இந்நேரம் தான் இறங்கியது ஈரோடு ஸ்டேஷன் என்பதை அறிந்து அவஸ்தைப் பட்டுக்கொண்டிருப்பான். ஹஹ்ஹ ஹஹ்ஹ ஹா!" என்றுகூறிப் பலமாகச் சிரித்தான், ஆறுமுகம்.

"அப்படி 'திடுதிப்' பென்று தெரியாமல் இறங்கிவிடுவான்

என்று நான் நினைக்கவே இல்லை, ஆறுமுகம்!" என்றான் நாராயணன்.

ஒரு நிமிஷ மௌனத்திற்குப் புறம் நாராயணன் பேச்சைத் தொடர்ந்தான்.

"ஆறுமுகம்! உனக்கு குமாஸ்தா வேலை நிச்சயம் கிடைக்கும் என்று நினைக்கிறாயா? சிதம்பரம் பிள்ளை மிகவும் கண்டிப்பான பேர்வழியாம். சரியான யோக்கியதாம்சங்கள் இல்லாவிட்டால் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளவே மாட்டாராம்!"

"ப்பூ! என்ன கண்டிப்பான பேர்வழி? என்னிடம் என்ன யோக்கியதாம்சம் இல்லை? எம். எல். ஏ. ரத்தினசாமியிடமிருந்து சிபார்சுக் கடிதம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேனாக்கும்! அவரும் சிதம்பரம் பிள்ளையும் நெருங்கிய நண்பர்களாம்! அதனால் எனக்கு வேலை நிச்சயம். தெரிந்ததா?"

"இருந்தாலும் எத்தனையோ பேர் அதற்குப் போட்டியிடலாம். சிறந்த வேலை! உயர்ந்த சம்பளம்!"

"நூறு பேர் போட்டியிடட்டுமே! சிபார்சுக் கடிதம் ஒன்றே போதும், எனக்கு!"

அவர்களின் பேச்சு எதிரில் அமர்ந்திருந்தவரின் கருத்தைக் கவர்ந்தது. அவர் அமைதியாக அமர்ந்து அவ்வாலிபர்களையும், அவர்கள் பேச்சையும் உன்னிப்பாகக் கவனித்தார். அவ்வப்பொழுது அவர்களுக்குத் தெரியாமல் தனக்குள்ளே புன்னகை புரிந்தார்.

இரு வாலிபர்களின் பேச்சு மேலும் தொடர்ந்தது.

"பாவம்! அந்தப் பட்டிக்காட்டான் என்ன ஆனானோ?" எங்கு திண்டாடுகிறானோ!

"ஈரோட்டைக் கோயமுத்தூர் என்று நம்பி ஊருக்குள் போய் ஏமாந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பான்!"

"அல்லது ஸ்டேஷனை விட்டு வெளியேறுவதற்கு முன், தான் ஏமாந்து போனதை உணர்வான். பிறகு ஸ்டேஷனிலேயே தங்கி அடுத்த ரயிலுக்காக ஆவலோடு காத்திருப்பான்!"

"இதைப் போல வேடிக்கையை நான் எப்பொழுதும் கண்டதில்லை!"

அதே சமயம், ஏமாற்றமடைந்த சோமசுந்தரம் ஈரோடு ஸ்டேஷனில் அனலில் இட்ட புழுவாய்த் துடித்துக்கொண்டிருந்தார். ரயில் ஈரோட்டைவிட்டுப் புறப்பட்டபின்னரே, தாம் தவறான ஸ்டேஷனில் இறங்கியதை அறிந்தார். அடுத்த நாள் காலைவரை வேறு ரயில் இல்லாததால், வேதனைப்பட்ட உள்ளத்துடன், 'பிளேட் பாரத்'திலேயே அமைதியற்று அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார். தூக்கமும் வரவில்லை. பாவம்!

மறுநாள் காலை, ஏழு மணிக்குக் கோயமுத்தூர் செல்லும் ரயில் வந்தது. அப்பொழுது ஒரு வாலிபன் ரயிலில் சௌகரியமாக இடம் பிடிக்க வேகமாக ஓடிவந்தான். ஓடிவந்த அவன், தன் எதிரில் வந்த சோமசுந்தரத்தின்மேல் மோதிக் கொண்டான்.

வேகமாக மோதியதால் கீழே விழப்போன சோமசுந்தரத்தைப் பிடித்து, "ஓ! தெரியாமல் செய்து விட்டேன்! மன்னித்துக்

கொள்ளுங்கள், பெரியவரே!" என்று அனுதாபத்துடன் கூறி மன்னிப்பைக் கோரினான்.

தம்மைச் சமாளித்துக் கொண்ட சோமசுந்தரம், "பரவாயில்லை, தம்பி! வருத்தப்படாதே!" என்றார்.

"நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்று வினவினான் வாலிபன் விநயத்துடன்.

"கோயமுத்தூருக்கு... இந்த ரயில்தானே போகிறது?" என்றார் சோமசுந்தரம்.

"ஆமாம்...நானும் அங்கே தான் போகிறேன். வாருங்கள்: வண்டியில் ஏறிக் கொள்ளலாம்!" என்று கூறி சோமசுந்தரத்துடன் வண்டியில் ஏறி அமர்ந்தான் வாலிபன்.

சிறிது நேரத்தில் ரயில் புறப்பட்டது.

"உன் பெயர் என்ன, தம்பி!" என்றார் சோம சுந்தரம்.

"பாலசுந்தரம்!"

"கோயமுத்தூருக்கு என்ன வேலையாகப் போகிறாய்?"

"அங்கே ஒரு மில்லில் குமாஸ்தா வேலை காலி யிருப்பதைக் கேள்விப்பட்டு விண்ணப்பம் போட்டிருந்தேன். நேரில் வரச் சொல்லி எழுதி யிருக்கிறார்கள். அதனால்தான் போகிறேன்!"

"அப்படியா! சந்தோஷம். உனக்கு வேலை கண்டிப்பாகக் கிடைக்கும்!"

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதம், பெரியவரே!"

"என் ஆசீர்வாதம் எதற்குத் தம்பி? கடவுள் இருக்கிறார், எல்லோரையும் ஆசீர்வதிக்க. நல்லவர்களை அவர் எந்நாளும் கைவிடமாட்டார்...அ...து சரி, அங்கே நூல் மில் நடத்திவரும் சிதம்பரம் பிள்ளையை உனக்குத் தெரியுமா?"

"அவரிடம் தான் நான் வேலை தேடிப் போகிறேன்!"

"அப்படியா! நல்லது. என்னையும் உன் கூடவே அழைத்துக் கொண்டுபோ. அவரை நானும் பார்க்க வேண்டும். நான் ஊருக்குப் புதியவன். வழிதெரியாது!"

"அப்படியே செய்கிறேன்!"

ரயில் கோயமுத்தூரை அடைந்தது. இருவரும் இறங்கி சிதம்பரம் பிள்ளையின் மில்லுக்குச் சென்றனர்.

பாலசுந்தரம் அங்கே சோமசுந்தரத்தை விட்டுவிட்டு, "நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். நான் பதினொரு மணிக்குத்தான் இங்கு வரவேண்டும். அதற்குள் வேறொரு வேலையைப் பார்த்துக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்றுகூறி விடை பெற்றுச் சென்றான்.

சோமசுந்தரம் 'மில்'லிற்குள் நுழைந்து சிதம்பரம் பிள்ளையைப்பற்றி விசாரித்தார். அவர் இருக்கும் அறை காட்டப்படவே உள்ளே சென்றார்.

அங்கே அமர்ந்திருந்தவரைப் பார்த்து, "என்ன, சிதம்பரம், சௌக்கியமா?" என்று கேட்டார்.

அவரைக் கண்ட சிதம்பரம் பிள்ளை சட்டென்று எழுந்து நமஸ்கரித்து, "வாருங்கள்! வாருங்கள்! என்ன திடீரென்று புறப்பட்டு வந்திருக்கிறீர்கள்? ஒரு கடிதம் எழுதி யிருந்தால் நானே ஸ்டேஷனுக்குக் காரில் வந்திருப்பேனே! ஸ்டேஷனிலிருந்து நடந்தா வந்தீர்கள்? மிகவும் களைத்துப்போ யிருக்கி

"ஏண்டி சீதா, சந்தையிலே வாங்கி வந்த கீரையைச் சுத்தமாய்க் கழுவி விட்டாயா?"

"ஆமா அம்மா. சோப்புக்கூடப் போட்டுக் கழுவினேன்"

—P. L. காந்தி, சென்னை 6

நீர்களே! இரவெல்லாம் தூக்கமில்லாத பிரயாணம்போலிருக்கிறது!'' என்று வாத்சல்யத்துடன் விசாரித்தார்.

சோமசுந்தரம் தமது பிரயாணத்தின் போது நடந்த கஷ்டங்கள் அனைத்தையும் சொன்னார்.

அதைக்கேட்டு வருந்திய சிதம்பரம் பிள்ளை, "அடடே, அப்படியா நடந்துவிட்டது? பாவம்! உங்களை அல்லல் படுத்தி விட்டார்களே அயோக்கியர்கள்! அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன்......இருக்கட்டும். நீங்கள் இவ்வளவு தூரம் வந்த காரணம்......?" என்றார்.

சோமசுந்தரம் தமது கஷ்ட நிலையையும், நிலங்கள் அடமானத்தில் முழுகப் போவதையும் சொன்னார்.

"நீங்கள் இந்த ஏழையின் மேல் மனமிரங்கிக் கொடுத்த பொருள்தான் எனது இந்த நிலைமைக்குக் காரணம். நீங்கள் மட்டும் சமயத்தில் உதவிசெய்திராவிட்டால், நானும் கோடிக்கணக்கான ஏழைகளுள் ஒருவனாகத்தான் அலைந்து கொண்டிருப்பேன். இப்பொழுது உங்கள் கஷ்ட நிலைமையில் உதவி செய்வது என் கடமை! நன்றி செலுத்தும் முறையும் கூட! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நிலங்களை நான் மீட்டுக் கொடுக்கிறேன்.!'' என்று தைரியம் கூறிவிட்டு, காபி பலகாரம் வரவழைத்துக் கொடுத்தார்.

அதை உண்டு களைப்பாறினார் சோமசுந்தரம்.

மணி பதினொன்றாகியது. தம்முடைய விளம்பரத்தைப் பார்த்து குமாஸ்தா வேலைக்கு மனுச் செய்து, நேரில் வந்தவர்களை ஒவ்வொருவராக அவர் உள்ளே வரச்சொன்னார்.

முதலில் ஆறுமுகம் உள்ளே நுழைந்து, சிதம்பரம் பிள்ளைக்கு வணக்கம் செலுத்தினான். வணக்கம் செலுத்தியவன் திடுக்கிட்டு நின்றான். ஏன்? மில் முதலாளி சிதம்பரம் பிள்ளையையும், அவர் அருகே இருந்த சோமசுந்தரத்தையும் கண்டுதான் அவன் திடுக்கிட்டான். சோமசுந்தரம் ஈரோட்டில் அவனால் ஏமாற்றப்பட்டு இறங்கித் திண்டாடியவர்; சிதம்பரம் பிள்ளை ஈரோட்டிலிருந்து அவன் வந்த வண்டியில் அவனுக்கு எதிராக உட்கார்ந்து, அவனும் அவன் நண்பனும் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டு வந்தவர்!

நிலை தடுமாறி நின்ற ஆறுமுகத்தைப் பார்த்து, "உன் பெயர்?" என்று கேட்டார் சிதம்பரம் பிள்ளை.

ஒரு நிமிஷம்!

பொங்கல் மலர் வெளிவருவதால், ஜனவரி இதழ் இராதோ என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்படலாம். சந்தேகமே வேண்டாம். ஜனவரி இதழ் வழக்கம்போல், ஜனவரி முதல் தேதி வந்துவிடும். பொங்கல் மலர் ஜனவரி 13-ம் தேதியே எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

இதை ஏஜெண்டுகளும், சந்தாதார்களும், வாசகர்களும் கவனிப்பார்களாக! —நிர்வாகி

"ஆறுமுகம், சார். எனக்கு டைப் அடிக்கத் தெரியும்... சுருக்கெழுத்துக் கூடத்தெரியும்..."

"பிறரை ஏமாற்றி, அவர்கள் அவஸ்தைப்படுவதை வேடிக்கை பார்க்கவும் உனக்குத் தெரியும் அல்லவா?"

இந்தக்கேள்வி அவன் உள்ளத்தில் இடியைப்போல் இறங்கிற்று! பதிலொன்றும் பேசாமல் தலை குனிந்தவாறு நின்றான்.

சில விநாடிகள் கழிந்தன.

பிறகு தன்னைச் சமாளித்துக்கொண்டு, "மன்னிக்கவேண்டும். ...எம். எல். ஏ. ரத்தினசாமியிடமிருந்து சிபார்சுக் கடிதம் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன், சார்!" என்றான்.

"அதை நான் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. உன்னை ஏற்கனவே நான் பார்த்து உன் குணம், செய்கை முதலியவற்றை அறிந்துகொண்டுவிட்டேன். அப்படிப்பட்டவனுக்கு நற்சாட்சிப்பத்திரமும், சிபார்சுக் கடிதமும் எப்படிப் பயன்படும்? உனக்கு வேலை கிடைக்காது...நீ போகலாம்!"

குனிந்த தலையுடன் அவ்விடம் விட்டகன்றான், ஆறுமுகம். தான்செய்த பெரும் தவறை நினைத்து வருந்தினான்.

பிறகு பாலசுந்தரம் உள்ளே வந்து, வணக்கம் செலுத்தி அடக்கமாக நின்றான்.

சிதம்பரம் பிள்ளை அவனைப் பார்த்து, "உன்பெயர்?" என்று கேட்டார்.

"பாலசுந்தரம், சார்!...இந்த வேலையில் அமர்ந்தால் வறுமையால் வாடித்துடிக்கும் என் பெற்றோரைக் காப்பாற்றமுடியும்! ஆனால், எனக்கு சிபார்சு செய்ய யாருமே இல்லை!"

"ஏன் இல்லை? நான் இருக்கிறேன், தம்பி! உனக்கு வேறு சிபார்சு எதற்கு?" என்று சோமசுந்தரம் குறுக்கிட்டுக் கூறினார். பிறகு சிதம்பரம் பிள்ளையிடம், "இவன்தான் எனக்கு உதவி செய்தவன்! இவன் இல்லாவிட்டால் உன்னைத்தேடி இங்குவர நான் மிகவும் கஷ்டப்பட்டிருக்க வேண்டும்!" என்று பாலசுந்தரத்தின் உதவியையும், அவனது மரியாதைக் குணத்தையும் எடுத்துச் சொன்னார்.

வேறு சிபார்சுக் கடிதம் இல்லாமலேயே பாலசுந்தரத்திற்கு வேலை கிடைத்துவிட்டது!

O

179248

Edited, Printed and Published by Rama. Arunachalam, at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1. Hon. Editor: AL. Valliappa.

Regd. No. M. 5771

தயாராகிறது!

சென்ற வருஷத்துப் பொங்கல் மலர் சிறப்பாக இருந்தது என்று நீங்கள் கூறினீர்கள்.

இந்த வருஷத்துப் பொங்கல் மலர் அதைவிடச் சிறப்பாக இருக்கும் என்று நாங்கள் கூறுகிறோம்.

Shanti Press, Madras-1